இரண்டாம் பதிப்பு

பக்கங்கள்

விலை சதம் 5

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகாரவகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப்பிள்ளை & சன்ஸ்
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும்
சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தனிப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம	5
3 மாதச் சந்தா	ரூ	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு புரட்டாசி மீ 29உ புதன்கிழமை | Colombo, October, 15 1947 | ஹிஜிரி 1366 துல்கஃதா பிறை 29 | இதழ் 134

இலங்கை பிரதிநிதிகள் சபையின் முதல் கூட்டம்

திரு. ஏ. எப். மொலமுரே 'ஸ்பீக்கர்' ஆனார்

சாதகமாக 58 வாக்குகளும் பாதகமாக 41 வாக்குகளும் கிடைத்தன

பாராளுமன்றக் கட்டிடத்தைச் சுற்றி ஏராளமான ஜனத்திரள்

பிரிட்டிஷ் சர்க்கார் புகுத்திய சோல்பரி அரசியல் திட்டத்தின்படி சிருஷ்டியான இலங்கைப் பிரதிநிதிகள் சபை நேற்று முதன் முதலாகப் பழைய அரசாங்க சபைக் கட்டிடத்தில் கூடியது. பிரிட்டிஷ் பாராளுமன்ற சம்பிரதாய முறைகளைப் பின்பற்றி, பிரதிநிதிகள்சபைக்குத் தலைமை வகிக்கும் 'ஸ்பீக்கர்' தெரிந்தெடுக்கப்பட்டார்.

முந்திய அரசாங்க சபையின் முதல் தலைவராக இருந்தவரான திரு. ஏ. எப். மொலமுரே சாதகமாக 58 வோட்டுகளும் பாதகமாக 41 வோட்டுகளும் பெற்று 'ஸ்பீக்கரா'கத் தெரிந்தெடுக்கப்பட்டார். பின்னர் பிரதிநிதிகள் விசுவாசப் பிரமாணம் செய்து தத்தம் ஆசனத்திலமர்ந்தனர்.

திரு. ஆர். ஏ. டி மெல் டெபுடி ஸ்பீக்கராகத் தெரிவு செய்யப்பட்டார். சாதகமாக 52 வோட்டுகளும் பாதகமாக 47 வோட்டுகளும் கிடைத்தன.

கொழும்பு, அக் 15

முதலாவது பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபையின் கூட்டம் நேற்று சரியாக 10 மணிக்கு நடைபெற்றது.

சரியாக ஒன்பதரை மணிக்கு பொதுஜனங்கள் கலரிகளில் உட்கார்ந்து கொண்டார்கள்.

சபைக் கட்டிடத்தின் வெளியே பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் குழுமியிருந்தனர். மோட்டார் கார்கள் ஒரே வரிசையில் கட்டிடத்தின் வெளியே அடுக்கப்பட்டிருந்தன. போலிசார் கட்டிடத்தின் வாசலில் காவல் காத்திருந்தனர். டிக்கட் உள்ளவர்களையே, சபை நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு உட்செல்ல விட்டனர்.

முதலாவதாகப் பிரதிநிதிகள் சபையில் புகுந்தவர் திரு. ஆர். எஸ். தென்னக்கோனும் பாரியாருமாவர்.

தமிழ்பிரதிநிதிகளுள் திரு. ஜீ. ஜீ பொன்னம்பலத்தையும் திரு. கே. கனகரத்தினத்தையும், திரு. இராமலிங்கத்தையும் தவிர்த்து யாவரும் தேசிய உடையில் சபையில் காட்சியளித்தனர்.

செஞ்சட்டை சிவத்த "டை" கட்டிய பிரதிநிதிகள் ஏராளமாகச் சபையினுள் காணப்பட்டனர். பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயக்காவும் மீன்பிடி இலாகா மந்திரி திரு ஜார்ஜ ஈ. டி சில்வாவும் தங்கள கோட்டுச் சட்டைகளில் ஒவ்வொரு "பூ" வைத்திருந்தனர்.

ஸ்ரீமதி. புளோரன்ஸ சேனநாயக்காவும் டாக்டர் என்.எம். பெரேராவும் அவர்களுக்கென ஒவக்கப்பட்டிருந்த கதிரைகளில் முதலாவதாக வந்து உட்கார்ந்தனர்.

எல்லாப் பிரதிநிதிகளும் வந்து உட்கார்ந்து கொண்டதும பிரதிநிதிகள் சபையின் லிகிதர் திரு. ஆர். எஸ். டி. பி. டெரனியகல, சபைக் கூட்டத்தை கவர்னரின் அறிக்கையை வாசித்து ஆரம்பித்தார்

ஸபீக்கர் தேர்தல்

இதன்பின்புசபை ஸபீக்கரைத் தெரிவு செய்ய ஆரம்பித்தது.

யூ என். பிக் கடசி அபேட்சகராகிய திரு ஏ. எப். மொலமுரேயை மன்னர் பிரதிநிதி திரு ஸி சிற்றம்பலம் பிரேரித்தார். பட்டிருப்புப் பிரதிநிதி திரு எஸ். யூ. எதிர்மன சிங்கம அனுமதித்தார்.

திரு எச். ஸ்ரீநிசங்காவின் பெயரை மத்துகமைப் பிரதிநிதி திரு வில்மட் ஏ. பெரேரா பிரேரித்தார். ஊர்காவற்றுறை பிரதிநிதி திரு ஏ எல். தம்பி அய்யா அனுமதித்தார்.

பலாங்கொடைப் பிரதிநிதி திரு ஏ. எப். மொலமுரே பிரதிநிதிகள் சபையின் முதலாவது "ஸபீக்கராக"த் தெரிவு செய்யப்பட்டார்.

திரு மொலமுரே 58 வாக்குகள் பெற்றார். திரு நிசங்கா 41 வாக்குகள் பெற்றார். சபையில் இரு பிரதிநிதிகள் வாக்களிக்கவில்லை.

வாக்குச் சீட்டுகளெல்லாம் ஒரு சிறு பெட்டியில் சபை லிகதர் திரு டெரனியகலையால் சேகரிக்கப்பட்டன. பின் அப்பெட்டியைத் திறந்து வாக்குச் சீட்டுகளை எண்ணப் பார்த்தபொழுது பெட்டியின் திறப்பைக் காணவில்லை. ஆகவே லிகிதர் ஒரு கத்திரிக்கோல் நுனியால் அப்பெட்டித் திறப்புத் துவாரத்தை உடைத்துத் திறந்தார்.

இதன் பிறகு திரு மொலமுரே தமது ஸ்தானத்துக்குச் சென்று சபையாருக்கு நன்றி கூறிவிட்டு கவர்னர் மாளிகைக்குச் சென்றார். அவருடன் திரு சிற்றம்பலமும், திரு எதிர்மன சிங்கமும் உடன் சென்றனர்.

பின் 10-12 மணிக்கு சபைக்கு ஸபீக்கர் வந்தார்.

சபையில் திரு மொலமுரே, லண்டனிலுள்ள பாராளுமன்ற சபையின் ஸபீக்கர் இலங்கைப் பிரதிநிதிகள் சபையின் ஸபீக்கருக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியைச் சபையில் படித்தார்.

திரு எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அரசாங்கம் சார்பாக ஸபீக்கர் திரு மொலமுரேக்கு நன்றி தெரிவித்தார்.

முறைக்கு முரண்பாடு

டாக்டர் என். எம் பெரேரா நன்றி தெரிவித்தபொழுது பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் 1895-ம் ஆண்டு தொடக்கம் கடசிச் சார்புள்ளவர்களைச் சபையின் ஸபீக்கராகத் தெரிவு செய்வதில்லையென்றும், இப்பொழுது நடந்த தெரிவில் பிரதம மந்திரி எதிர்க்கட்சிகளுடன் கலந்தாலோசித்திருந்தால் இங்கும்அப்படிச் செய்திருக்க முடிந்திருக்குமென்று கூறினார்.

நடுநிலைமை வகிக்கவேண்டும்

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தனது தமிழ்க் காங்கிரஸ கட்சிப் பிரதிநிதிகள் சார்பாக நன்றி தெரிவித்தபோது, ஸபீக்கர் பதவி மிகவும் மகத்தானதென்றும், தெரிவு செய்யப் பட்டவர் நடுநிலைமை வகிக்க வேண்டுமென்றும் கூறினார். திரு சௌமியமூர்த்தி தொண்டமான் பின் இலங்கை இந்தியன் காங்கிரஸ பிரதிநிதிகள் சார்பாக நன்றி தெரிவித்தார்.

பேச்சு சுதந்திரம்

திரு கொல்வின் ஆர் டி எில்வா எதிர்க் கட்சியினராகிய தாங்கள் இந்த ஒரு ஸபீக்கர் விஷயத்தில் நன்றி தெரிவிப்பதில் தான் மற்றவர்களுடன் ஒத்துழைப்பதெனக் கூறி, பழைய அரசாங்க சபை மந்திரிகள் ஏற்படுத்தியபொது ஜனப் பாதுகாப்புச் சட்டம் மாதிரி பிரதிநிதிகளின் பேச்சுச் சுதந்திரத்தை ஸபீக்கர் கட்டுப்படுத்த மாட்டாரெனத் தாம் நம்புவதாகவும் சொன்னார்.

மேலும் டாக்டர் டி. சில்வா சொன்னதாவது:-"புதிய ஸபீக்கர், பிரிட்டிஷ் ஸபீக்கர் அனுப்பிய வாழ்த்தில் பிரிட்டனுக்கும், இலங்கைக்கும் நல்லுறவு ஏற்படுத்தத் தக்கனதாக இருக்க வேண்டுமென்று வாசித்தார்; ஆனால் நாம் அதை தகர்ப்போம்".

திரு பீட்டர் கெனமனும் கமியூனிஸ்ட் கட்சிப் பிரதிநிதிகள் சார்பாக நன்றி தெரிவித்தார்.

விசுவாசப் பிரமாணம்

இதன் பிறகு பிரதிநிதிகள் யாவரும் இராஜ விசுவாசப் பிரமாணஞ் செய்து கொண்டார்கள்.

ஊர்காவற்றுறையில் ஜலக் கஷ்டம்

ஊர்காவற்றுறை, அக். 14

ஊர்காவற்றுறை நகர சங்க எல்லையில் தண்ணீர்ப் பஞ்சம் தலைகாட்டியுள்ளது. இதனால் பொது ஜனங்கள் குடிக்கத் தண்ணீருக்கு கஷ்டமுறுகின்றனர் நகர சங்கம், பொதுஜனங்களுக்கு குடிப்பதற்குத் தண்ணீர் லொறி மூலம் சப்ளை செய்து வருகிறார்கள். ரேஷன் முறை அனுஷ்டிக்கப்படுகிறது.

இளவரசி திருமணப் விண்ஸ்டர் தம்பதிகளுக்கு அழைப்பு இல்லை

லண்டன், அக். 14

அடுத்த மாதம் நடக்கவிருக்கும் எலிஸபெத் இளவரசியின் திருமணத்திற்கு வின்ஸடர் கோமஹன் தம்பதிகளுக்கு அழைப்பு இதுவரை கிடைக்கவில்லையென்று வின்ஸடர் கோமகனின் காரியதரிசி தெரிவிக்கின்றார். பிரிட்டனில் மேரி அரசியின் லண்டன் இல்லத்தில் வின்ஸடர் கோமகன் தங்கியுள்ளார். (ராய்ட்டர்)

பிரிட்டிஷ் அந்நியநாட்டு மந்திரியைக் கொல்ல முயற்சி

போலிஸ பாதுகாப்பு

லண்டன், அக் 14

பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி திரு பெவினைக் கொலை செய்ய முயற்சிகள் நடப்பதாக அறியப்பட்டதன் மேல் திரு பெவினைப் பாதுகாக்கப் போலிஸ பந்தோபஸது பலப்படுத்தப்பட்டுள்ளது. (ராய்ட்டர்)

மாஜி பிரதமர் தற்கொலை முயற்சி

பர்மா மந்திரிகள் கொலை வழக்கின் முதல் எதிரி

ரங்கூன், அக். 14

பர்மா மந்திரிகள் கொலை வழக்கின் முதல் எதிரியான மாஜி பிரதம மந்திரி ஊ ஸா இன்சீன் சிறையில் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்ததாக 'ரங்கூன் மிரர்' என்ற ஆங்கில தினசரிப் பத்திரிகை தெரிவிக்கிறது.

பத்து அந்தர் சீனி களவு

3 பெட்டி குடிவகையும் போயின

கொழும்பு, அக். 14

திரிகோணமலைக்கு அனுப்பப்பட்ட ஒரு சாமான் வண்டியில் இருந்து 10 அந்தர் சீனி மாயமாய் மறைந்துவிட்டது இது தவிர 3 பெட்டி குடிவகைகளும், காணாமற் போய் இருக்கின்றன. இரண்டு களவுகளும் கதவின் சீல் உடைக்கப்படாமலே நடந்திருக்கிறது குறிப்பிடத் தக்கது.

சீனியைப் பொறுத்தவரையில் கீழ்ப்பலகை இடைவெளியால் மூடைகள் அறுக்கப்பட்டுக் களவு நடந்திருக்கிறது. குடிவகைக் களவோ பெரிய மர்மமாகவே தோன்றுகிறது.

உதவித் தொழில் கமிஷனர்

கொழும்பு, அக். 14

பிரிட்டிஷ் தொழில் சர்வ கலாசாலையில் படிப்பதற்காகச் சென்றிருந்த உதவித் தொழில் கமிஷனர் திரு எம். ராஜநாயகம் தமது ஒரு வருஷப் படிப்பு முடிந்து நேற்று இலங்கை திரும்பினார்.

இங்கிலாந்தில் உள்ள தொழில் இலாகாவின் வேலை முறையையும் அவர் நன்கு ஆராய்ந்திருப்பதாகத் தெரிகிறது.

அமெரிக்காவுக்கு ஐரோப்பிய தங்கம்

இரண்டு வாரங்களில் 1680 லட்சம் டாலர் வந்துள்ளது

நியூயார்க், அக். 14

ஐரோப்பாவிலிருந்து கடந்த 2 வார காலங்களுக்கிடையில சுமார் 1680 லட்சம டாலர் மதிப்புள்ள தங்கக் கட்டிகள் கப்பலில் அமெரிக்கா வந்து சேர்ந்துள்ளது. இதில் இங்கிலாந்து வங்கியிலிருந்தே பெருந்தொகை வந்துள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை "குயின் மேரி" என்னும கப்பலில் 40,600,081 டாலர் மதிப்புள்ள 700 பெட்டி தங்கமும் கடந்த செவ்வாய்க்கிழமை "ஏரிவின்" என்னும் பிரஞ்சுக் கப்பலில் 28,153,084 டாலர் மதிப்புள்ள தங்கமும், திங்கட்கிழமை 'போர்ட டி பிரான்ஸ்' என்னும கப்பலில் 17,000,000 மதபபுள்ள தங்கமும வந்துள்ளன. கடந்த வாரம் சுவீடனிலிருந்து சாகார் 15,000,000 டாலர் மதிப்புள்ள தங்கத்தை அனுப்பியுள்ளதாக அறியபபடுகறது. அததுடன் 'குயின எலிஸபெத்' எனனும் கப்பல 67,000,000 டாலர் மதிபபுள்ள தங்கததையும் கொணடுவந்துள்ளது.

பத்திரிகைகள் எச்சரிக்கை

அயல் நாட்டுத் தங்கத்தை அமெரிக்காவுகுள் இறக்குமதிசெய்ய மேலும் மேலும் அனுமதிததால் வெளி நாடுகளின நாணய மதிப்பு குறைந்துவிடுமென்று "ஹெராலடு டரிப்யூன" என்னும் பததிரிகை தலையங்கததில் எழுதியுள்ளது. மேலும் வெளி நாடுகளிலிருந்து தங்கம் முழுமையையும் பெற்றாலும மீணடும் அவறறில் சிறிதை வெளிநாடுகளுக்குகொடுககவேண்டியே வருமென்றும், பொருளாதார நெருக்கடியைத தவிர்கக இடைக்கால உதவியைச் செய்வதுடன் மாஷல திடடத்தை ஏற்பதுதான் சிறந்த முறையென்றும் மேலும் பத்திரிகை கூறுகின்றது.

ரஸஸெல் தீவில் தங்கப் புதையல்

தென் பர்மா பகுதியில் விக்டோரியா முனையிலிருந்து சுமார் 28 மைல தூரததிலுள்ள ரஸஸெல் தீவில் தங்கப் புதையால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எடடு சதுர மைல பிரதேசமுள்ள குடி ஜனமற்ற இத்தீவில மேலும பலவகைப் பொருட்களும கண்டுபிடிக்கப்பட்டுளளதாகக் கூறபபடுகிறது. பர்மிய சர்க்கார் ஆராய்ச்சிக் கோஷ்டி இன்று புறப்படுகிறது.

லியோநோராவுக்கு வடக்கே அக்னியூ என்னு மிடத்தில் புதிய இடத்தில் தங்கம கண்டு பிடிக்கப்படடுள்ளது.

வேலணை கிராமச் சங்க புதிய தலைவர்

ஊர்காவற்றுறை, அக் 14

வேலணை கிராமச் சங்கத தலைவர் திரு இ. மருதையனார் தமது பதவியை ராஜினாமாச் செய்தது காரணமாக அச் சங்கததின் உப தலைவராக இருந்த திரு சு. இராமசாமி தலைவராகத தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆசிய நாடுகளின் உறவு

இந்தியா பிரதமரை, பர்மா பிரதமரும் சயாம் அந்நிய நாட்டு மந்திரியும் சந்திப்பர்

இந்தோனேஷியாவிலும், வியட்நாமிலும் டச்சு, பிரெஞ்சு ஆக்கிரமிப்புகள்

இந்தியா வர்த்தகக் கப்பற் படை திரட்டுகிறது

லண்டன், அக் 13

சயாம் சர்க்காரின அந்நிய நாட்டு மந்திரி அர்த்தகீர்த்தி அமெரிக்காவில் ஐக்கிய தேச அசெம்பிளி கூட்டததிற்கு விஜயம் செய்துவிட்டு இங்கு வந்திருக்கிறார். இன்று அவர் பிரிட்டிஷ் அந்நிய நாட்டு மந்திரி பெவினைச் சந்தித்துப் பேசினார்.

அவர் சயாம் திரும்பிச் செல்வதற்கு முன் இடபொழுது சுவிட்ஜர்லந்தில் ஜினிவாவில் தங்கியிருக்கும் சயாம மன்னர் அதுலதததரைக் சந்தித்து விட்டு டில்லிக்குச் செல்கிறார். இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு அழைத்திருப்பதால் அவர் நேருஜியை டில்லியில் சந்தித்துப் பேசுவார்.

பர்மா சுதந்திரம்

பர்மா சுதந்திர மசோதா நாளை நடைபெறும் பிரிட்டிஷ் மந்திரி சபைக் கூட்டத்தில் ஆலோசிக்கப்படும். இம்மாதக் கடைசியில் பார்லிமெண்ட் ஆரம்பமாகும்போது பிரிட்டிஷ் மன்னர் தன் பிரசங்கத்தில் அதைப்பற்றிப் பிரஸ்தாபிப்பார். பர்மா ஜனுவரி மாதம் சுதந்திரம் பெறுவதால் அதை அடிப்படையாகக் கொண்ட பர்மா - பிரிட்டன் நிதி ஒப்பந்தம் வெள்ளிக்கிழமையன்று இங்கு கைச்சாத்திடப்படும்.

ஆங்கிலோ - பர்மா உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு ரங்கூனிலிருந்து லண்டனுக்குப் பயணமான பர்மா பிரதமர் தக்கின் நு இன்று கராச்சியில் தங்கினார். அவர் லண்டனிலிருந்து ரங்கூன் திரும்புகையில் இந்தியா பிரதம மந்திரி பண்டித நேரு அழைப்பின் பேரில் டில்லியில் தங்கி நேருஜியைச் சந்தித்துப் பேசுவார்.

இந்தியா - சயாம் உறவு

புதுடில்லி, அக். 14

இந்தியாவில் சயாம் சர்க்கார் ஸதானிகராக இருக்கும் 35 வயதுள்ள டாக்டர் தானுதி கோமான் பின்வருமாறு தெரிவித்தார்:-

சயாமுக்கும் இந்தியாவுக்கும் நெருங்கிய உறவையும் வர்த்தக தொடர்பையும் உண்டுபண்ணும் பொருட்டு, சயாம் சர்க்கார் டில்லியில் ஸதானிகரை நியமித்திருப்பதுடன் இன்னும் ஒரு மாதத்திற்குள் கலகத்தாவிலும் ஒரு ஸதானிகரை நியமிப்பார்கள். அதன் பிறகு பம்பாயிலும் ஒரு ஸதானிகரை நியமிப்பார்கள். இந்தியாவும் சயாமும் பண்டைக்காலந்தொட்டு நெருங்கிய உறவு கொண்டிருந்தன. இடையே மேனாட்டாரின் ஆதிக்கததின் பயனாக அறுபட்ட இப்பூர்வீக தொடர்பை மீண்டும் உறுதியாக ஸதாபிக்க இரு நாடுகளும் முயற்சிக்கும். இரு நாடுகளின் நாகரீகமும் கலாச்சாரமும் ஒன்றானவையாகும். இதன் காரணமாகவே சயாம சர்க்கார் நுண்கலை இலாக்காதார் டிசம்பர் மாதம் இந்தியாவுக்கு ஒரு நடனக் கோஷ்டியை அனுப்பி வைப்பார்கள். இக்கோஷ்டி இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து நடனக் கச்சேரிகள் நடததி அதன் மூலம் வசூலாகும் தொகையை அகதிகளின் கஷ்ட நிவாரண நிதிக்குக் கொடுக்கும். கலாச்சாரத் தல் சயாம் இந்தியாவுக்குநன்றி செலுததத கடமைப்பட்டிருக்கிறது. இந்தியாவே சயாமுக்கு கலைகளையும் மததத்தையும் நாகரீகததையும் தந்துதவியது. ஆசியா மகாநாட்டுக் கொள்கையை நிறைவேற்றி வைத்து ஆசியாவில் அமைதியையும் சுபீட்சத்தையும் நிலைநாட்ட இரு நாடுகளும் தோளோடு தோள் நின்று ஒத்துழைக்கும்.

சயாமுக்கு இந்தியாவின் சணலும் பருத்தி, ஜவுளிகளும் தேவை. யுத்த காலததில மிஞ்சியசாமான்களை வாங்க இந்திய சர்க்கார் சயாமுக்கு சென்ற வருடம் கொடுதத 5 கோடி ரூபாய் செலவாகிவிட்டதால் இந்தியாவிலிருந்து சாமான்கள் வாங்க சயாமுக்கு ரூபாய் தேவையாக இருக்கிறது. அதற்காக சயாம் இந்தியாவுக்கு அதிகமான அரிசி ஏற்றுமதி செய்ய முயற்சிக்கிறது. ஒவ்வொரு மாதமும் உலகிலேயே சிறந்த பதினாயிரம் டன் அரிசியை ஏற்றிககொண்டு சயாமிலிருந்து கப்பல்கள் கல்கததாவுக்கு வந்துகொண்டிருக்கின்றன.

இந்தோனேஷியாவுக்கு 10,000 டச்சு துருப்புகள்

ஹேக், அக். 14

நவம்பரிலும் ஜனுவரியிலும் டச்சு சர்க்கார் இந்தோனேஷியாவுக்கு பதினாயிரம் டச்சுத் துருப்புகளை அனுப்பி வைப்பார்கள்.

டச்சுக் கமிஷன் ஜெனரலாக இந்தோனேஷயக் குடியரசுடன் இந்தோனேஷிய ஐக்கிய சர்க்காரை டச்சு ஆதிக்கத்தில் நியமிக்க சமரசம் பேச சென்ற ஷெர்மர்ஹார்ன் இன்று ரேடியோவில் பேசியபோது டச்சு சர்க்காருடன் ஒத்துழைக்கும் புதிய இந்தோனேஷிய சர்க்காரை நியமிக்க வேண்டுமென்றும்

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 ஏ, கிட்டாத் தெரு, கொழும்பு. போன்: 8411.

சர்வஜித்து ஞு புரட்டாசி மீ 29உ புதன்கிழமை

மகாகவி பாரதி

நேற்று தமிழ் மக்களுக்கு ஒரு மகத்தான தினம். உயிருடன் இருக்கும் பொழுது அலட்சியஞ் செய்த ஒரு மகாகவிக்கு நேற்றுததான் தமிழ் மக்கள் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஆங்கில மகா கவி ஷேக்ஸபியர் பிறந்த இடம் ஸ்ருட்வோட்-ஒன்-அவொன் ஆகும். அவ்விடத்திலுள்ள அவரது இல்லம் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அவ்விடத்தைத் தரிசியாத எந்த ஆங்கிலேயனும் உலகத்திலேயே இருக்க மாட்டான். அத்தனை மதிப்பு ஆங்கிலேயர் தங்கள் கவிக்குக் கொடுத்து வருகிறார்கள்.

இவ்வகையில் சற்றும் தமிழர்கள் குறைந்தவர்களல்லர் என்பதை மகா கவி சுப்பிரமணிய பாரதி இறந்த அறுபத்தைந்து வருடங்களுக்குப் பின்பாவது காட்டியதையிட்டு எவரும் பெருமை கொள்ளத்தான் செய்வர். தமிழர்கள் ஒரு கவிஞருக்கு ஞாபகச் சின்னம் நிறுவி இத்தனை பெரிய விழாக் கொண்டாடியது இதுதான் முதற் தடவையாகும். தமிழ் நாட்டிலேயே இத்தகைய சிறப்பான விழா இதுவரை நடந்ததில்லை என்றே கூறிவிடலாம்.

எட்டயாபுரத்தில் கவி பிறந்த வீடு நேற்று தேசிய ஞாபகார்த்தமாக்கப்பட்டுள்ளது. ஐம்பதாயிரம் ரூபாய் செலவில் மூன்று ஏக்கர் நிலத்தில் நகருக்குள் போகும் வழியிலிருக்கும் இந்த ஞாபகார்த்தக் கட்டிடத்தின் முன் வாசல் தென்னாட்டுக் கோபுரத் தோரணையில் கட்டப்பட்டிருக்கிறது. இரு புறங்களிலிருக்கும் மாபெரும் மண்டபங்களில் நூல் நிலையம், சண்காட்சிசாலை இருக்கின்றது. பாரதி நூல்களும் இதர தமிழ் நூல்களும் புத்தகசாலையிலிருக்கும். காடசிச் சாலையிலோ கைப்பிரதிகளும், சுப்பிரமணிய பாரதி கையாண்ட இதர சாமான்களும், வெளியார் கொடுத்த சுவடி ஏடுகளுமிருக்கின்றன. அதோடு வால்மீகர், வள்ளுவர், காளிதாசன், கம்பர் போன்ற பழைய கவி வாணர்களின் படங்களுமுள. இத்தகைய தனிப் பெருஞ் சிறப்புடன் நமது மகாகவியின் ஞாபகார்த்த நிலையம் விளங்குகின்றது.

1945-ம் ஆண்டில் இக் கட்டிடத்திற்கு அத்திவாரக் கல் நாட்டிய சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களே அதை நேற்று திறந்து வைத்துள்ளார்.

பாரதி அடிமையில் ஊறிக் கிடந்த தமிழனுக்கு சுதந்தர சக்தி யூட்டிய தந்தை. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவ அதனைத் தட்டி எழுப்பிப் புத்துயிரளித்த சஞ்சீவி தமிழ் நாட்டில் வீரக்கனலை எழுப்பி, ஆண்மை ஊட்டி ஆளும் பணிபுரிந்த வெற்றி வீரக்கவி. அறிவு, ஆற்றல், அஞ்சாமை, ஒற்றுமை, விடுதலை என்னும் பஞ்சப் பிராணனைத் தமிழனுக்குக் கொடுத்த பிரமம். தீண்டாமையை ஒழிக்க முற்பட்ட சமரசவாதி. பெண் விடுதலைக்காகப் போர் புரிந்த தீரன்.

அமரகவி பாரதி வாழ்க! எட்டயாபுரத்தின் பெருமை எட்டுத் திக்கிலும் பெருக தமிழ் மக்கள் அவர் லட்சியத்தைப் போற்றி உழைப்பார்களாக!

அமெரிக்க ஸதானிகர்-இலங்கை மந்திரிகள் சந்திப்பு

கொழும்பு, அக். 14

கொழும்பிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் தலைவர் பி. என். ஜெஸ்டர் இலங்கையின் புதிய மந்திரிமாரை நேற்று சென்று பேட்டி கண்டார். அவருடன் மாஜி அமெரிக்க ஸதானிகர் மலானும் கூடச் சென்றிருந்தாரென்று தெரிகிறது.

காலனிகளுக்கு ஏகாதிபத்திய இருட்டடிப்பு

தகவல் அறிவிக்க கோரிக்கை

தர்மகர்த்தா கமிட்டியில் இந்தியாவின் வெற்றி

நியூயார்க், அக். 12

சுய ஆட்சி இல்லாத காலனிகளைப் பற்றி தகவல் விசாரிக்க ஒரு கமிட்டியை நியமிக்க வேண்டுமென்று இந்தியப் பிரதிநிதி ஸர் மகராஜ்சிங கொண்டு வந்த பிரேரணை நிறைவேறிற்று. காலனிகள் உடைவல்லரசுகள் எல்லாம் இப் பிரேரணையை எதிர்த்தும், இந்தியாவின் பிரேரணை தர்மகர்த்தா கமிட்டியில் நிறைவேறியதுதான் ஆச்சரியமாகும்.

இந்தியாவுக்குச் சாதகமாக 23 வோட்டுகளும், எதிர்தையாக 19 வோடுகளும் பதிவு செய்யப்பட்டன.

ஆசிய தொழிலாளர் மகாநாடு

மகாத்மா காந்தி டில்லியில் ஆரம்பித்து வைப்பார்

புதுடில்லி, அக். 13

டில்லியில் இம்மாதம் 27-ம் தேதி ஆரம்பமாகும் ஆசிய பிரதேச தொழிலாளரின் பூர்வாங்க மகாநாட்டை மகாத்மா காந்தி ஆரம்பித்து வைப்பாரென்று இந்திய தொழிலாளர் ஸ்தாபன காரியாலயத்தின் பொறுப்புள்ள அங்கத்தினரிடமிருந்து அறிவதாய் யு. பி. செய்தி ஒன்று கூறுகிறது.

இந்த மகாநாட்டில் எல்லா ஆசிய நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்வர். பாக்கிஸ்தான் தொழில் மந்திரி ஸ்ரீ மண்டல் தலைமையில் இம் மகாநாட்டிற்கு ஒரு கோஷ்டியை அனுப்பபாக்கிஸ்தான் சர்க்கார் உத்தேசித்திருக்கிறது.

ஸர். ஸி. பி. அமெரிக்க யாத்திரை

உதகமண்டலம், அக். 13

ஸர். ஸி. பி. ராமசாமி அய்யர் ஜனுவரி மாதம் அமெரிக்காவில் இலக்கிய தத்துவ பிரசங்கங்கள் செய்வதற்காக யாத்திரை செய்கிறார். இந்தச் சுற்றுப்பிரயாணம் இரு வருடங்களுக்கு முன்பே வகுக்கப் பட்டதாயினும் அடிக்கடி ஒத்திவைக்கப்பட்டு வந்தது.

வாதப்பிரதிவாதத்துக்கு இடந்தரும் விஷயங்களைப்பற்றி இவர் அமெரிக்காவில் பேசமாட்டார்.

அமெரிக்காவில் விஸகி வெள்ளம்

பிரிட்டனிலோ மதுவகை வரட்சி

லண்டன், அக். 12

பிரிட்டனில் மதுபான வரட்சி. ஆனால் அமெரிக்காவிலோ ஸ்காட்லாந்து விஸகி வெள்ளம்போல் பெருக்கெடுக்கிறது மேற்கண்டவாறு "ஸகாட்ச் விஸகி சங்கத"தின் சார்பில் ஒருவர் குறிப்பிட்டார்.

இவ்வருடம் 10,400,000 கலன் விஸகி தயாரிக்கப்படும் என்றும் அதில் 7,800,000 கலன் அமெரிக்கா செல்லும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ராய்ட்டர்)

ஹைஸ்கூல் மாணவர்களுக்கு ராணுவ பயிற்சி

சர்க்காருக்கு ஆலோசனை கூற கமிட்டி நியமனம்

சென்னை, அக். 13

ராணுவ சம்பந்தமான பயிற்சியை ஹைஸ்கூல் மாணவர்களுக்கு அளிப்பதாய் சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது. இதற்காக சர்க்கார் ஒரு கமிட்டியை நியமித்து யோசனை கூறும்படி கேட்டிருக்கிறது. இஞ்சினியரிங காலேஜ ஆசிரியர் கர்னல் எஸ். பால் கமிட்டியின் தலைவர். ஸ்ரீ. குருவில்லா ஜேகப், ஸ்ரீ. எப். ஆண்ட்ருஸ், ஸ்ரீ. பி. எம். ஜோசப் அங்கத்தினர்கள்.

தன்னை வென்ற பின் உலகை வென்று வரும் மகாத்மா

இங்கிலாந்தை ஜெயித்த மூன்றாவது வீரர்

காந்திஜிக்கு அமெரிக்க பாதிரியார் புகழுரை

பம்பாய், அக். 14

"மகாத்மா காந்தியின் ஆத்ம சக்தியின் மகிமையினபடி வாழ்வதன் மூலம் அவரது வாழ்க்கையின் இரகசியங்களை எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று இன்று மாலை முற்போக்கு வாதிகள் கூட்டம் ஒன்றில் பேசுகையில் ரெவரண்ட டாக்டர் ஹேனஸ ஹோம்ஸ கேட்டுக் கொண்டார். டாக்டர் ஹோம்ஸ ஒரு அமெரிக்கர்; காந்தி பக்தர்.

தாம் பாரிஸில் விமானத்திற்காக காத்துக் கொண்டிருக்கையில் அக். 2-ம் தேதி காந்தி ஜெயந்தியன்று தாம் இந்தியாவில் இருக்க முடியவில்லையென நினைத்தபோது தாம் தனிமையையும், வருத்தத்தையும் உணர்ந்ததாகக் கூறினார். அவர் மேலும் பேசியதாவது:-

ஜூலியஸ் சீஸர் வெற்றி வீரன் (நார்மண்டி) வில்லியம் இவர்களுக்குப் பிறகு இங்கிலாந்தை ஜெயிக்க மூன்றாவது வீரராக மகாத்மா வருகிறாரென்றே வட்டமேஜை மகாநாட்டின் போது நான் நினைத்தேன். ஆனால் முந்திய வெற்றி வீரர்களைப்போல இங்கிலாந்தில் மகாத்மா படை பலத்துடன் வந்து இறங்கவில்லை. ஆனால் பிறருக்கு துன்பம் விளையாத-தம்மையே சோதனை செய்யும் மகத்தான ஆத்ம சக்தியுடன் வந்திறங்கினார் மகாத்மா.

மகாத்மா தமது "உண்மைபற்றி எனது சோதனைகள்" என்ற நூலில் கூறியுள்ளபடி முதலில் தம்மையே தாம் வென்றார். அவரது இரண்டாவது வெற்றி தம் நாட்டு மக்களுக்கு விடுதலை வாங்கித் தந்ததாகும்.

சுதந்திரம் அளித்ததோடல்லாமல் அந்த சுதந்திரத்தை சரியான முடிவுகளுக்கும் கண்ணியமான காரியங்களுக்கும் பயன்படுத்த நமக்கு அவர் உபதேசித்து வருகிறார். இதுதான் அவரது இறுதி மகத்தான வெற்றியாக விளங்கும். இந்த வெற்றி இனித்தான் ஏற்பட வேண்டும் அதைப் பெறவே அவர் வாழ்கிறார்.

நீண்ட உடைக்கு ஹங்கேரிய நாரீமணிகள் ஆட்சேபம்

16 பெண்களின் 'கிண்டல்' ஊர்வலம்

புடாபெஸ்ட், அக். 14

பெண்களிற் சிலர் நீண்ட உடைதரிக்கும் வழக்கத்தை புடாபெஸ்டில் மேற்கொண்டுள்ளனர். இது குறுகிய உடைதரிக்கும் நாகரீக இளமங்கையருக்குப்பிடிக்கவில்லை. அவர்களில் 16 பேர் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்ளும் பொருட்டு கிண்டலான முறையில் மிகவும் நீண்ட உடைகளைத் தரித்துக் கொண்டு மௌன ஊர்வலம் சென்றனர்.

பிரபல சோஷியலிஸ்டின் மரணம்

சிட்னி வெப் காலமானார்

லண்டன், அக். 13

பிரபலசோஷியலிஸ்டும், "சோவியத் கம்யூனிஸம் - ஓர் புதிய நாகரீகம்" என்ற பிரசித்தி பெற்ற நூலின் ஆசிரியரில் ஒருவருமான சிட்னி வெப் என்னும் பாஸ்பீல்ட் பிரபு ஹாம்ஷயரில் உள்ள தமது வீட்டில் காலம் சென்றுவிட்டார்.

இறக்கும்போது அவர் வயது 88 ஆகும். (ராய்ட்டர்)

ஹரிஜன மாப்பிள்ளைக்கு பிராமணப் பெண்

தமிழ் நாட்டில் ஜாதி பேதம் ஒழிகிறது

சட்டசபைத் தலைவர் தலைமையில் விவாகம்

சர்க்கார் மாளிகை விருந்து மண்டபத்தில் வைபவம்

சென்னை அக். 11

சென்னை அசெம்பிளி சபா நாயகர் ஸ்ரீ சிவஷண்முகம் பிள்ளை, அக்டோபர் 16-ம் தேதி காலை 8 மணிக்கு, சர்க்கார் விருந்து மண்டபத்தில் நடக்கப்போகும் கலப்பு மணத்துக்கு தலைமை வகிப்பார். அப்பொழுது சென்னை அசெம்பிளி ஹரிஜன் அங்கத்தினரான ஸ்ரீ எஸ். குருவுலு, ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி என்ற பிராமணப் பெண்ணை மணஞ் செய்து கொள்வார்.

காந்திஜியுடன் அமெரிக்க பாதிரி சந்திப்பு

புதுடில்லி, அக். 13

ரெவ். ஜான் ஹோம்ஸ, அவர் மகன் புரொபஸர் ஹோம்ஸ், டேவிட் வாதுமுல் ஆகியவர்கள் நேற்று மகாத்மாவைத் தரிசித்தனர்.

ஏழு பேர் மீது கலக வழக்கு

நாவலப்பிட்டி தேர்தல் எதிரொலி

கொழும்பு, அக். 14

நாவலப்பிட்டி தேர்தல் முடிவுகள் வெளியானதும் நடைபெற்றதாகக் கூறப்படும் கலகம் சம்பந்தமான வழக்கு நாவலப்பிட்டி மாஜிஸடிரேட்டால் விசாரிக்கப்பட்டது. இவ்வழக்கில் சுமணதாச, தோமஸ் சிங்கோ, பீரிஸ் சிங்கோ, எட்வின் சில்வா, பியசேன, லுவிஸ் சிங்கோ, தர்மசேன என்ற எழுவர்மீது போலிஸாரால் குற்றம் சாட்டப்பட்டது எதிரிகள் தாம் நிரபராதிகள் எனக் கூறினார்கள்.

திரு. டி. டி. அபய குணவர்த்தனு இவ்வழக்கு சம்பந்தமாக கொடுத்த வாக்குமூலம் பின் வருமாறு:-

நான் ஒரு மருந்து விற்பனையாளனும், விவாகப் பதிவு உத்தியோகஸ்தனும் ஆவேன். தேர்தல் முடிவுகள் வெளியானதும் திரு ஆர். ஈ. ஜயதிலகா, முடிவுகளைக் கேட்கக் கூடியிருந்த ஜனத்திரளிடம் பேசினார். அப்போது அவர் தமக்கு எதிராக வேலைசெய்த இரு சிங்களவர்களைப் பற்றி குறிப்பிட்டார். நான் அவர்களில் ஒருவன். ஏனெனில் திரு ஜயதிலகாவுக்கு நான் மேற்படி தேர்தலில் எவ்வித உதவியும் செய்யவில்லை. அவரது பேச்சு முடிந்ததும் 2000 பேரடங்கிய ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. அதன் பின் மூன்றரை மணியளவில் எனது கடைக்குச் சமீபம் ஒரு ஜனத்திரள் வந்தது. முதலாம் எதிரி சுமணதாச குடி வெறியில் இருந்தான். உள்ளே புகுந்து மருந்து கேட்டுவிட்டு அவன் என்னை அடித்தான். மூன்றாவது எதிரி பீரிஸ் சிங்கோ அசிட் திராவகத்தை வீசினான். அது ஒரு சுவரில் பட்டு எனது வேலைக்காரனைக் காயப்படுத்தியது பின் எல்லா எதிரிகளும் உள்ளே புகுந்து சாமான்களை நாசப்படுத்தினர். எனக்கு இதனால் மொத்தம் ரூபா 1000 நஷ்டமேற்பட்டது. மேற்படி நிகழ்ச்சிகளுக்குக் காரணம் திரு ஜயதிலகாவின் பேச்சென்றே நான் கருதுகிறேன்.

மேற்படி சாட்சியத்தின்பின் வேலைக்காரப் பையனின் சாட்சியம் பதிவுசெய்யப்பட்டபின் வழக்கு அக்டோபர் 17-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்காளி இறந்தார்; வழக்கு ஒதுக்கப்பட்டது

மத்துரட்ட தேர்தல் எதிரொலி

நுவரெலியா, அக். 14

நுவரெலியாவின் அரசாங்க சபை அங்கத்தனராக ஒரு காலத்தில் சேவை ஆற்றிய இ. டபிள்யூ. அபயகுணசேகரா என்பவரால் மத்துரட்ட தொகுதிக்குப் போட்டியிட்டுத் தோல்வி அடைந்த அபேட்சகர் எட்மண்ட் குணவர்த்தனு மீது ஓர்வழக்குத் தொடரப்பட்டது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். எடமண்ட குணவர்த்தனு இவ்வழக்குக்குச் சில ஆட்சேபனைகள் கிளப்பியதன் பேரில் அவற்றை சென்ற வெள்ளிக்கிழமை டிஸ்டிரிக்ட் நீதிபதி விசாரிக்க முன்வந்தபோது வழக்குத் தொடர்ந்த அபயகுணசேகரா இறந்து போனதாகக் கோர்ட்டாரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இதன் காரணமாக வழக்கை ஒதுக்கிவிடும்படி நீதிபதி கட்டளையிட்டிருக்கிறார்.

மின்சார அதிர்ச்சியால் மரணம்

காலி அக். 13

சங்கை எஸ். டபிள்யூ. பர்னண்டோவின் கீழ் வேலைபார்க்கும் சமையற்காரி நோனா ஹாமி என்பவள் மின்சாரம் தாக்கி அவ்வதிர்ச்சியின் காரணமாக மாண்டுபோனாள். சேலை காயவிடும் ஒரு கொடியில் மின்சாரக் கம்பி பட்டு அதிலே மின்சாரம் பாய்ந்திருந்ததாகவும் அதனைத் தொட்டதாலேயே மேற்படி பெண் அதிர்ச்சி யடைந்து இறந்ததாகவும் தெரிகிறது.

அந்நியர் தலையிட அனுமதியோம்

திரு. கிருஷ்ண மேனன் எச்சரிக்கை

மான்செஸ்டர் நகரில் வரவேற்பு

மான்செஸ்டர், அக். 12

பிரிட்டனிலுள்ள இந்திய சர்க்கார் ஹை கமிஷனர் திரு வி கே கிருஷ்ணமேனன் பதவியேற்றபின் இன்று முதன் முதலாக மான்செஸ்டர் நகருக்கு விஜயம் செய்தார். அவருக்கு நகரசபை வரவேற்பு அளித்தது. மான்செஸடர் லார்டு மேயரும் மற்ற நகரசபை அங்கத்தினர்களும அவரை வரவேற்று உபசரித்தார்கள். அப்பொழுது அவர் பேசியதாவது:- பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சிமுறையை ஒழிப்பதற்காக இந்தியா பிரிவினையை ஏற்றுக்கொள்ளும்படி நிர்ப்பந்தமான நிலைமை ஏற்பட்டது. பிரிவினையால் விளையும் துயரங்களை இந்தியா அனுபவிக்கும்படி நேரிட்டது. பொதுவாகக் கிடைத்த சுதந்திரத்தில் இந்தியா மீண்டும் ஐக்கியமாகும் என்பது எல்லோரதும் நம்பிக்கையாகும் இந்தியா பிரிட்டனுடனும அதன மற்ற டொமினியன்களுடனும் நெருங்கிய உறவு வைத்துக் கொள்ளவே முயலும். இந்திய சர்க்கார் மிகத திறமையுடனும் தீரமுடனும் சாமர்த்தியமாக இந்தியாவன் பெரும் பாகத்தை அமைதியான நிலையில் நிர்வகித்து வருகின்றனர். மாறி வரும் ஆட்சி நிர்வாகத்தில் இந்தியாவில உள் நாட்டு யுத்தம் நிகழாதபடி ஒரிடத்தில் மட்டும் ஏற்பட்ட கலகத்தை அற்புதமாகச் சமாளித்து வருகிறார்கள். கூடிய சீக்கிரம் எங்கும் அமைதி நிலைநாட்டப்படும். பாக்கிஸதானுக்கு அளித்த வாக்குறுதிகளை இந்தியா நிறைவேற்றி வைக்கும். இந்த சந்தர்ப்பத்தை தங்களுக்கு அனுகூலப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, அந்நிய நாடுகள் தலையிடுவதற்கு இந்தியா ஒருபோதும் இடங்கொடாது

(ராய்ட்டர்)

அண்ணாமலை சர்வகலாசாலை அடிதடி

சிதம்பரம், அக். 13

சென்ற 6-ம் தேதி அன்று அண்ணாமலை சர்வகலாசாலையில் அடிதடி நடந்தது சம்பந்தமாக சர்வகலாசாலையைச் சேராத வெளியார் இருவரை போலிசார் கைது செய்திருக்கிறார்கள்.

பாக்கிஸ்தானுக்கு முப்புற நெருக்கடியாம்

ரஷியா, ஆப்கானிஸ்தான், இந்தியா

அமெரிக்க உதவிபற்றி 'நியூயார்க்டைம்ஸ்' பிரசாரம்

காஷ்மீருக்கு பாக்கிஸ்தான் எச்சரிக்கை

நியூயார்க், அக். 14

ரஷியா - இந்தியா ஆதரவு பெற்று பாக்கிஸ்தான் மீது ஆதிக்கம் காட்ட முயற்சிக்குமென்று எதிர்பார்க்கப்படும் ஆப்கானிஸதானை, அமெரிக்க இயந்திர தொழிற்சாலை நிபுணர்கள் உதவியுடன் சமாளிக்க முடியுமென்று பாக்கிஸதான் நம்புவதாக நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை நிருபர் கராச்சியிலிருந்து தெரிவிக்கின்றார். அந்நிருபர் தொடர்ந்து கூறுவதாவது:-

மேற்கு ஜனநாயக நாடுகளைப் போன்றே பாக்கிஸ்தான் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆனால் அயலில் இருந்து அதிக பலம் கொண்ட நாடுகள் ஆதிக்கம் காட்டி வெளியுதவியும் பாக்கிஸ்தானுக்குக் கிடைக்காதுவிட்டால பாக்கிஸ்தான் ரஷியாவின் ஆதிக்கத்திற்குட்பட்டுவிடும். பாக்கிஸதானிலுள்ள சர்க்கார் பிரமுகர்களை தனிப்பட்ட முறையில் கலந்துஆலோசித்ததன் பயனாக இதனை அறிய முடிந்தது. பாக்கிஸதான் டொமினியன் பிறந்த காலையில் ரஷியா தன் வாழ்த்துச் செய்தியை அனுப்பவில்லையென்றும் இதனாலேயே இங்குள்ள பிரமுகர்களுக்கு கவலையைக் கொடுக்கின்றதென்றும் கூறப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபைக்கு பாக்கிஸதானை அனுமதிக்கப்படாதென ரஷியாவுடன் ஆப்கானிஸதானும் வாக்களித்திருந்ததைப் பற்றியும் தலைவர்கள் தொடர்புபடுத்திக் கூறுகின்றனர்.

வாஷிங்டனில் ஸ்தானிகராக ஒரு வர்த்தகரைத் தெரிந்தனுப்பியுள்ளது. பாக்கிஸ்தானின் வர்த்தக தொடர்பு மனப்பான்மையைக் காட்டுவதாக கராச்சியில் ஒரு அதிகாரி கூறினார்.

எண்ணெய் சலுகை

பலுஜிஸ்தான், காலாட் ஆகிய இடங்களில் அமெரிக்கருக்கு எண்ணெய்ச் சலுகைகளைச் செய்து கொடுத்து அதற்குப் பதிலாக கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள சிட்டஹாங் துறைமுக அபிவிருத்திக்கு அமெரிக்க உதவி நாடப்படலாம் என்று பேசப்படுகிறது."

ஸ்தானிகரிடம் நிவாரண நிதி

பாஞ்சால நிவாரண கமிட்டி பிரதிநிதிகள் பாக்கிஸதான் ஸதானிகரான ஜனப் எம். ஏ. ஸபஹானியிடம் 13,000 டாலர்களை ஜனாப் ஜின்னாவுக்கு அனுப்புமபடி அளித்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

காஷ்மீருக்கு பாக்கிஸ்தான் எச்சரிக்கை

காஷ்மீர் எல்லைப் பகுதியிலுள்ள பாக்கிஸதானில் உள்ள முஸலிம் கிராமங்களில் ஆயுதந்தாங்கிய கோஷ்டியினர் முஸலிம்களைத் தாக்குவதாகவும் இதனைத் தடுக்க உடனே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அமைதியும் ஒழுங்கும் நிலைநாட்டப்பட எடுககப்பட்ட நடவடிக்கை பற்றி அறிவிக்க வேண்டுமென்றும் பாக்கிஸதான் வெளி நாட்டு மந்திரி இலாகா காஷ்மீர் சர்க்காருக்கு அறிக்கை விடுத்துள்ளது.

பாக்கிஸ்தானுடன் காலாட் சேரும்?

காலாட் சமஸதானத்தின் கான் விமானமார்க்கமாக 11-ம் தேதி மாலை கராச்சி வந்து சேர்ந்து பாக்கிஸதான் டொமினியன் கவர்னர் ஜெனரலைச் சந்தித்து காலாட் சமஸதானம் பாக்கிஸதான் டொமினியனுடன் சேர்வதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தினார். சுமார் ஒரு வார காலமாக சர்க்கார் மாளிகையில் கான் தங்கியிருப்பதால் இரு பகுதியினரும் முக்கிய விஷயங்களில தம்முள் சமரஸம் செய்துகொள்ள விரும்புகின்றனர் என்பதைக் காட்டுகின்றதென்று கூறப்படுகிறது.

மாஜி காலிப் கல்லறைக்கு நிஜாம் மான்யம்

துருக்கியின் மாஜி காலிப்பான காலஞ் சென்ற சுல்தான் அப்துல் மஜீத் மன்னரின் பிரேதத்தை பிரான்ஸில் இருந்து எடுத்துவர அவரது மகள் பேரார் இளவரசி பிரான்ஸிற்குச் சென்றுள்ளார். இவர் 1945-ம் ஆண்டில் பாரிஸில் காலமானார். இவரது பிரேதம் ஔரங்கபாத் ஜில்லாவில் குல்தாபாத் என்னுமிடத்தில் புதைக்கப்படுமென்று அறியப்படுகிறது. இங்கு கட்டப்படும் கல்லறைக்கு நிஜாம் சர்க்கார் ரூ 50,000 மான்யமளித்துள்ளது.

வைன், தண்ணீராக மாறியதா?

பிரண்டி 'பட்டராக' மாறியதாகவும் புகார்

வழக்குதள்ளுபடியாயிற்று

கொழும்பு, அக். 14

புறக்கோட்டை வாசியான ஜே. ஆர். பீட்டர் ஒரு போத்தல் பிரண்டி, ஒரு போத்தல் வைன் என்பனவற்றின் பெறுமதியான ரூபா 20-ஐக் கோரி அட்டோர்னி ஜெனரல் மீது தொடர்ந்திருந்த வழக்கு தீர்ப்பளிக்கப்பட்டுவிட்டது.

பீட்டர் தான் பண்டாரவளைக்கு அரசாங்க ரயில்வே மூலம் ஒரு போத்தல் பிரண்டியும், ஒரு போத்தல் வைனும் அடங்கிய பெட்டி ஒன்றை அனுப்பியதாகவும், ஆனால் அப்பொருட்களுக்குப் பதில் இரண்டு டின் பட்டரும், ஒரு போத்தல் தண்ணீருமே அங்கு தனது விலாசதாருக்குக் கொடுக்கப்பட்ட பெட்டியில் இருந்ததென்றும் அவரால் சொல்லப்பட்டது.

ரயில்வே தரப்பில் கூறப்பட்ட பதிலில் பெட்டியில் என்ன இருந்ததென்று அறிபாமலே தாம் மேற்படி பெட்டியைப் பெற்றுக்கொண்டதாகவும், அப்பால் தம்மால் கொடுக்கப்பட்டபோது அது நல்ல கட்டுக்குலையாத ஸ்திதியிலேயே இருந்ததாகவும் கூறப்பட்டது.

விசாரணை முடிவில் நீதிபதி வழக்கைச் செலவுக் காசுடன் தள்ளுபடி செய்தார்.

மிருணால் காந்தி கோஷ் மறைவு

கல்கத்தா, அக். 13

அமிர்த பஜார் பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ. துஷார் காந்திகோஷின் ஒன்றுவிட்ட சகோதரர் ஸ்ரீ மிருணால் காந்தி கோஷ் காலமானார். அவர் 15 வருஷங்களுக்கு மேலாக அமிர்த பஜார் பத்திரிகை டைரக்டர்கள் போர்டுக்கு சேர்மனாக இருந்து வந்தார்.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

இலங்கை இந்தியர் பிரச்னை

இந்திய முதலாளிகள் வருகை தடை செய்யப்படவேண்டும்

இதுவரை அரசாங்கம் கையாண்டு வந்த சீர்கேடான கொள்கை

திரு ஓ எஸ். எம். செனிவிரதன எனபவர் நேற்று முன்தினம் வெளிவந்த "சிலுமின" என்னும் சிங்களப் பதத்திரிகையில் பின்வருமாறுஎழுதுகிறார்:-

இந்தியர்கள் கட்டுப்பாடின்றி இலங்கைக்கு வந்துகொண்டிருப்பதானது, இன்று நம் நாட்டிலுள்ள அரசியல் பிரச்னைகளில் மிகவும் சிக்கலானதாய் இருக்கிறது. இந்தியர் பிரச்னை இவ்வளவு சிக்கலானதாய் இருப்பதற்கு காரணம், அவர்கள் இந்நாட்டிற்கு வருவதன் அடிப்படையான அபிலாஷைகள், இந்நாட்டு அரசியல்--சமூக--பொருளாதார-தொழில் துறைகளையும்,அதேபோன்று ஒவ்வொரு இலங்கையனதுவாழ்க்கைத்தரத்தையும் பாதிக்ககூடியதாய் இருப்பதுடன், பூரண சுயாதீனத்தை அடையும் நிலைமையில்உள்ள அடுத்த டெரிய தேசமான இந்தியாவிற்கும் இலங்கைக்கும் தொன்றுதொட்டு இருக்கிற நேசத் தொடர்பையும் பாதிக்கக் கூடியதாய்இருக்கிறது.

நம்நாட்டில் பிட்டிஷாரின் ஆட்சி ஆரம்பமானதிலிருந்து தான் இந்திய ஜனங்கள் இலங்கைக்கு வரத் தொடங்கினார்கள்.

ஆரம்பத்தில் இங்கே வந்த இந்தியர்கள் அரசாங்கத்தின் உதவியைப் பெற்றிருந்தார்கள் 1819 லிருந்து 1831 வரைக்கும் இலங்கை கவர்னராய் இருந்து இந்நாட்டின் போக்குவரத்தை சீர்படுத்துவதற்கு முக்கிய பங்கெடுத்துக்கொண்ட ஸர் எட்வர்ட் பார்ன்ஸ் அவர்கள், அரசாங்க வேலைகளுக்காக தொழிலாளர்களை சேகரிப்பதற்கு, இலங்கை தொழிலாளர் படையைத் திரட்டினார். ஐரோப்பிய அதிகாரிகளின் மேற்பார்வையில் இருந்த இந்த தொழிலாளர் படையில் இந்திய தொழிலாளரும் சிற்பிகளும் ஏராளமாக இருந்தனர்.

கூட்டமாக வரவழைத்தல்

இந்தியத் தொழிலாளர்கள் இந்நாட்டிற்கு படையெடுத்து வருவதற்கு தூண்டுகோலாய இருந்தது இங்கேகோப்பி ஏராளமாகப் பயிர் செய்ய ஆரம்பிக்கப்பட்டதேயாகும். இலங்கை கவர்னர் ஸர் எட்வட்பார்ன்ஸ அவர்களின் நண்பரான பர்ட் என்பவரால்தான் முதன் முதல் 1828-ல் கோப்பி பயிர் செய்கை ஆரம்பிக்கப்பட்டது இதன் பிறகு தேயிலை உற்பத்தியும் ஏராளமாக ஆரம்பிக்கப்படவே, இந்தியர் வருகை இன்னும் பன்மடங்கு அதிகரிக்கத் தொடங்கியது.

தோட்டக்காரர்களால் கொண்டுவரப் பட்ட இந்தியர்கள்

கோப்பியும் தேயிலையும்பயிர் செய்ய ஆரம்பிக்கப்பட்டவர்களால் தான் முதன் முதல் "கூட்டமாக" இந்தியத் தொழிளாளர்கள் வரவழைக்கப் பட்டார்கள். இப்படி தோட்டக்காரர்கள் ஏராளமாக இந்தியர்களை வரவழைப்பதற்கு காரணமாய் இருந்தது. அவர்கள் குறைந்த சம்பளத்திற்கு அடிமைகள் போன்று மட்டுக்கு மிஞ்சி வேலை செய்வதேயாகும். அதுவும், எந்தவிதமான உவத்திரவங்களையும்பொறுத்து செட்டாக வாழ்க்கை நடத்துவதும் தவிர ஆயிரக்கணக்காக அவர்கள் இங்கு வர விரும்பியதும் காரணமாகும்.

தொழிலையும் வர்த்தகத்தையும் பறித்தல்

இப்படியாக அன்றிருந்து இன்றுவரைக்கும் கூட்டம் கூட்டமாகவே இந்தியர்கள் இங்கு வந்து நிறைந்து விட்டார்கள். ஆரம்பத்தில் இந்தியர்கள் வரவும் போலிஸ் உதவியைப் பெற்றவந்தார்களெனினும், காலம் செல்லச்செல்ல வாததகர்களும் பெரியதன வந்தர்களான இந்தியர்களும் இங்கு வரத் தொடங்கினார்கள். இப்படி வந்தவர்களெல்லாருக்கும் இங்கே ஜீவனோபாயம் செய்து கொளவதற்கு மிகுந்த வசதியாய் இருந்தது. இந்தியர்கள் இங்கு வருவதை தடைசெய்யக்கூடிய சட்டத்திட்டங்கள் எதுவும் இல்லாதிருந்தபடியால், பெருக்கெடுத்தாற்போல் அவர்கள் இங்கு வரத் தொடங்கினார்கள். தடைகளில்லாத இந்தச் சந்தர்ப்பங்களினால் இங்கு வந்த இந்தியர்கள் இந்நாட்டில் எவற்றையெல்லாம் எவ்வகையில் கைப்பற்ற முடியுமோ அவைகளையெல்லாம் கூடியமட்டும் அபகரித்துக் கொண்டார்கள். இந்நாட்டவனுக்கு எதுவுமே செய்ய முடியாதபடி அவற்றையெல்லாம் தமக்குள்ளே நிரந்தரமாக்கிக் கொண்டார்கள்.

அரசாங்கசபையில் கிளர்ச்சி

கைத்தொழில் - வர்த்தகமும் மற்றும் ஜீவனோபாயத் தொழில்களும் சம்பந்தமாக இந்நாட்டிற்கு வந்துள்ள இந்தியர்கள் எவ்வளவு தூரம் கைப்பற்றியிருக்கிறார்களென்று 1930-ம் வருடத்திலிருந்து ஆரம்பித்த பொருளாதார மந்தத்தினால் தான் சரியானபடி அறிந்து கொள்ளக் கூடியதாய் இருந்தது இதற்குமுன் இதைப்பற்றி எவருமே எப்படியும் அக்கறை கொள்ளவேயில்லை மேலும் இந்நாட்டிற்கு ஜீவனோபாயத்திற்காக வந்த இந்தியர்கள் இந்நாட்டு அரசியல் விவகாரங்களில் எவ்வளவு ஆதிக்கம் பெற்றிருக்கிறார்களென்று தெரிய வந்தது. 1931-ம் வருடம் டொனமூர் அரசியல் திட்டம் அமுல் நடத்த ஆரம்பித்ததிலிருந்து தான்.

குணசிங்கா கிளப்பிய பிரச்னை

முதலாவது அரசாங்க சபைக் காலம் (1936) வரையும் நம் நாட்டில் பொருளாதார மந்தமும் வேலையில்லாத் திண்டாட்டமும் மிகவும் கொடுமையாக தாண்டவமாடியது. இதனால் இந்தக் காலங்களில் தொழிலாளர் சம்பந்தமாக மிகவும் கவனம் செத்திய திரு ஏ. ஈ. குணசிங்கா கட்டுப்பாடின்றி இலங்கைக்கு வரும் லட்சக்கணக்கான இந்தியர் பிரச்னையை அரசாங்க சபையில் கிளப்பினார்.

திரு. நடேசய்யர் கிளர்ச்சி

1936-ல் ஆரம்பமான இரண்டாவது அரசாங்க சபையில் இலங்கையில் வியாபித்திருக்கும் பொருளாதார மந்தத்தையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒரு வகையிலாவது சமாளிக்க ஹேதுவாய் இருக்க வேண்டுமென்ற திரு. குணசிங்காவின் இந்தியர் தடைப் பிரச்னை சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு டாக்டர் என். எம். பெரேராவும் அனுகூலமாயிருந்தார் இந்தியர் பிரச்னை சம்பந்தமாக தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று ஓர் தீர்மானத்தை கொண்டுவந்து சம்பந்தமாக மந்திரி சபையை பல முறையும் வேண்டிக்கொள்ளப்பட்டது. வர்த்தக மந்தத்தினால் தோட்டங்கள் மூடப்படவே இந்தியத் தொழிலாளர்கள் மட்டற்ற கஷ்டநஷ்டங்களுக்கு ஆளானார்கள். வேலையில்லாத எல்லா இந்தியத் தொழிலாளர்களையும் மறுபடியும் தாய்நாட்டிற்கு அனுப்பிவிடும்படி ஹட்டன் பிரதிநிதியாய் இருந்த திரு கோ. நடேசய்யர் அரசாங்க சபையில் ஒரு கிளர்ச்சியைஉண்டாக்கினார். இது சம்பந்தமாக மந்திரி சபை எடுக்க போகும் கடவடிக்கைகள் என்ன? இந்தப் பிரச்னை சம்பந்தமாக பத்திரிகள் என்ன முறைகளைக் கையாண்டார்கள்? என்பவற்றைப் பற்றி இங்கு ஆராய்ந்து பார்ப்பது முக்கியம்.

அனுதைகளை மாத்திரம் அனுப்பும் சட்டம்

அந்நியர்களின் வருகையைக் கட்டுப்படுத்தக்கூடிய விதிகள் எதுவும் சட்டப்பிரமாணத்தில் இருக்கவில்லை.

அப்படியாயினும் அந்நிய தோட்டத் தொழிலாளரின் வருகையை தடைசெய்வது சம்பந்தமாக அரசாங்கத்தின் உதவியோடு ஒரு திட்டம் இருந்தது அவற்றிலொன்று, புதிதாக தொழிலாளர்களை வரவழைக்க வேண்டுமானால் தொழில அத்தியட்சகரின் அனுமதியைப் பெறுவதாகும். மற்றப்படி, இந்தியாவுக்கு அனுபப்பட்ட தோட்டத தொழிலாளர்கள் மறுபடியும் இலங்கைக்கு வரவேண்டுமானால் அவர்கள் முன் வேலை செய்த தோட்டத்தில் மறுபடியும் வேலைக்கு அமர்த்திக்கொளளுவதற்கு தயார் என்று தோட்டத்து சூப்ரண்டின் கடிதத்தை தொழில் அத்தியட்சகருக்கு அனுப்புவதனால் மாத்திரம் தொழிலாளர்களை வரவழைக்க முடியும் அரசாங்க சபையிலும், வெளியேயும் இந்தியர் வருகை சமபந்தமாக எழுப்பப்பட்ட கிளர்ச்சிகளின் பிரதிபலனாக, தொழிலாளர்களை வரவழைப்பதற்கு அனுமதிச் சீட்டு வழங்கும் முறை தடை செய்யப்படடது

ஒரே ஒரு சட்டம்

தோட்டத் தொழிலாளர்களைவிட, மற்ற தரத்திலுள்ள இந்தியர்கள் இங்கே வருவதை தடை செய்வது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்கு எவ்வித நீதிநிதியும் இருக்கவில்லை; இன்றுமே இல்லை. இது சம்பந்தமாகவுளள ஒரே ஒரு நீதி யென்னவென்றால, அகதிகளின் வருகையைத் தடை செய்வதேயாகும். இதானது 1907-ம் வருடம் இயற்றப்பட்ட சட்டமாகும் இச் சட்டம் இன்னும் அமுலில் இருக்கிறது. அந்நிய நாட்டிலிருந்து இங்கு வருபவர், தனக்கு இலங்கையில் வேலை செய்ய இடமிருக்கிறதாக ருசுப்படுத்த வேண்டுமென்று இந்த சட்டத்தில் அடங்கியிருக்கிறது. அப்படியன்றேல, ஆசியாப் பிரஜையென்றால், அவரிடம் 150 ரூபாயும் ஐரோப்பியரானால் அவரிடம் 600 ரூபாயும் இருக்க வேண்டும். மேற் கூறிய இரண்டு தகுதிகளும் இல்லாதவருக்கு இங்கேயுள்ளவரின் பிணைப் பத்திரத்தை சமர்பிப்பதன் மூலம் இலங்கைக்கு வர முடியும். அந்தப்பிணைப் பத்திரததை ஒப்புவிக்கும் நபர், வரவழைக்கப்பட்டவர் அனுதையாய்ப் போகும் பட்சத்தில் தம் செலவிலேயே அவரை சுய நாட்டிற்கு அனுப்ப வேண்டும் என்று சட்டம் கூறுகிறது. போலிசாரால் தான் இந்தச் சட்டம அமுல் நடத்தப்படுகிறது.

அரசாங்கத்தின் அலட்சியப் போக்கு

பொருளாதார மந்தமும் வேலையில்லாத் திண்டாட்டமும் உக்கிரமாக இருந்த சமயத்தில், அரசாங்கம் அதற்குத் தகுந்தாற்போல் நடவடிக்கை யெடுத்திருக்க வேண்டியதெனினும், அப்படி யொன்றும் கையாளாமல் அரசாங்கம் வாழாவிருந்து விட்டது தேசத்திற்கு பெரு ஆபத்து ஏற்படும் சந்தர்ப்பங்களில் எந்த தேச அரசாங்கமும் மிகவும் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது ஓர் இராஜ தந்திரமாகும். எனினும் இப்படியாக கடுமையான நடவடிக்கைகளைக் கையாண்டால் இந்தியாவின் வெறுப்பிற்கு இலக்காக இருக்கக்கூடும். அரசாங்கம் அப்படி அலட்சியமான கொள்கையை அனுசரிக்க வேண்டிய முக்கிய காரணங்களிலொன்று, இங்கே பலவித உரிமைகளையும் தமக்கு நிரந்தரமாக்கிக்கொண்டிருக்கும்இந்திய பணக்காரர்கள், முதலாளிகள், இலங்கையில் நிறுவியிருக்கும் வர்ததகதொழில்துறைகள்பின் வாங்கப்படுமோ வென்ற பீதி தான். குறைந்த சம்பளத்திற்கு மிகவும் கீழ்ப்படிதலாகதேவையானமட்டும் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களை வரவழைப்பதில் மோகங்கொண்டஐரோப்பியர்களும் இந்நாட்டுத் தனவந்தர்களும் ஒருகாரணம் தான.

கொத்தலாவல திட்டம்

போக்குவரத்து மந்திரி திரு. கொத்தலாவல இன்னும் ஒரு முறையைப் பின்பற்றினார். அதாவது, அரசாங்க இலாககாகளில் வேலை செய்யும் இந்தியர்களை அவர்களின் விருப்பப்படியே சுயநாட்டிற்கு அனுப்பி வைப்பதாகும். அந்த தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈட்டுப் பணததோடு அரசாங்கச் செலவில பிரயாண வசதியும் செய்து கொடுக்கப்பட்டது. எவ்வித குறறமுமின்றி, நியாயமான முறையில் எடுத்துக்கொண்ட இந்த நடவடிக்கைகக இலங்கையில் விசேஷ உரிமைகளைப் பெற்றிருக்கிற இந்தியர்கள் பலமான எதிர்ப்பை உண்டாக்கினார்கள். இவர்களின் எதிர்ப்பு எவ்வளவு உக்கிரமாக இருந்ததென்றால, இந்தப பிரச்னை சம்பந்தமாகஜவஹர்லாலநேரு கூட இலங்கைக்கு வர நேரிட்டது.

படித்த வாலிபனின் ஏமாற்று வித்தை

குடும்ப நண்பன்போல் நடித்த சாமர்த்தியம்

கொழும்பு, அக். 13

கொழும்புக்குச் சமீபம் வசிக்கும் ஒரு வயோதிப விதவை ஓர் இளைஞனால்ஏமாற்றப்பட்டிருக்கிறாள. பிரஸ்தாப இளைஞன் விதவையின் கணவனை அறிந்தவன் போன்றும் குமாரர்களின் நண்பன் போலவும் நடித்தநடிப்பிலே அம்மாதுமயங்கிவிட்டாள்.

தான் ஒரு ஏலவிற்பனைக்குச் செலவதாகக் கூறி தன்னுடன் வரும்படியாக விதவையை அவன் அழைக்கவே சந்தேகிக்காது அவள் உடன் சென்றாள் விறபனை ராணுவ முகாமில் நடப்பதால் அவள் உள்ளே வர முடியாது என்று கூறி அவளை வெளியே நிற்கும்படி வேண்டினான் இளைஞன். மாது ரூபா 100ஐ அவனிடம் கொடுத்து சாமான்களுக்காகக் காத்துநின்றாள்.

அவன் அதன்பின் ஒரு கட்டிடத்துள் நுழைந்தான். பின் அவன் திரும்பவே இல்லைஎன்று அறியப்படுகிறது.

மிதிபலகைப் பிரயாணிகள் தொல்லை

25 பேர் கைது

கொழும்பு, அக். 13

கெலனிவலி ரயிலில் மிதிபலகையில தொங்கு பிரயாணிகள் 25 பேர் இன்றுகாலை கைது செய்யப்பட்டனர்.

பிரஸ்தாப பிரயாணிகளிடம் டிக்கட்டுகளும் காணபபடவில்லையாம்.

இலங்கையில் இந்தியப் பந்தாட்டக்காரர்

கொழும்பு, அக் 13

இந்திய கிரிக்கட் பந்தாட்டமுக்கிய ஸதரும்,விளையாட்டுகள் சம்பந்தமான பதத்திரிகை எழுத்தாளருமான பேராசிரியர் டியோடார் இலங்கையில் விமான மார்க்கமாக சனிக்கிழமை வந்திறங்கினார்.

இன்று மாலை அவர் ஆஸதிரேலியாவுக்குப் பிரயாணமானார்.

பாம்பு தரிசனத்திற்குப் பல்லாயிரம் போ

கொழும்பு அக் 13

தெஹிவளை மிருகக் காட்சிச் சாலைக்கு வந்திருக்கும புதிய நாகராஜனைப் பார்ப்பதற்காக பெருவாரியான ஜனங்கள் சென்ற வாரம் சமுகமளித்ததாகத் தெரிகிறது.

மேலும் அதிக மாவு

கொழும்பு, அக். 12

அமெரிக்காவில் இருந்து இரண்டு கப்பல் நிறைந்த மாவு இலங்கை வந்து சேர்ந்துவிட்டது

புதுடில்லியில் இலங்கை மாளிகை

நிறுவுவதற்கு இலங்கை பிரதிநிதியின் முயற்சி

கொழும்பு, அக். 13

புதுடில்லியிலிருக்கும் இலங்கை அரசாங்கததன் இந்தியப் பிரதிநிதி திரு எம். டபிள்யூ. எச். டி. சில்வா பிரதமர் சேனநாயக்காவைக் கண்டு பேசுவதற்காகஇலங்கை வந்துள்ளார்.

இலங்கை இதுவரை இங்கிலாந்திடம் இருந்து பெற்று வந்த பொருட்களை இந்தியாவிலிருந்தே இனிப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் எதிர்காலததில் இலங்கை இந்திய வர்ததகம் அதிக வளர்ச்சி அடையும் என்றும் அவர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளதாகத தெரிகிறது. ஆனால் இந்தியாவின் உள்நாட்டு உணவு நிலைமை சீர்கெட்டிருப்பதால் அரிசி மட்டும் பெற்றுகொள்ள முடியாது என்றே அவர் தெரிவித்தாராம்.

புதுடில்லியில் இலங்கை மாளிகை நிறுவ நிலம் வாங்கும் பிரச்னையை அவர் பிரதமருடன் ஆலோசிப்பார் என்று தெரிகிறது. இந்திய அரசாங்கம் 1200 ஏக்கர் நிலத்தை ஸதானிகர்களுக்கு ஒதுக்கப் போவதாகவும் அதில் இலங்கையும தனது கட்டிடத்தை நிறுவ போதிய நிலம் பெறவேண்டும் என்றும் அவர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

இலங்கையிடம் நட்புணர்ச்சியே இந்தியாவில் நிலவுகிறது என்பது அவர் அனுபவம் பாக்கிஸதானுக்கு இலங்கையின் பிரத்தியேக ஸதானிகரை நியமிப்பது பற்றியும் அவர் இங்கு ஆலோசனை நடத்துவார்என்று அறியப்படுகிறது.

ஏழு கொலைகள்

சென்ற வார பிற்பகுதியில் நடைபெற்றன

கொழும்பு, அக். 13

சென்ற வார பிற்பகுதியில 7 கொலைகள் நடைபெற்றிருப்பதாக இங்கு செய்திகள் எட்டியுள்ளன. இவை பன்விலை, கட்டுகாஸ்தொட்ட,ஹன்வலை,மாத்தறை, ஜாஎலை, திரிகோணமலை பெலியத்தை முதலிய இடங்களில் நடைபெற்றிருக்கின்றன

இவற்றில் பெலியத்தை போலிஸ் வட்டாரததில் கொலைசெய்யப்பட்ட குணசிங்க துப்பாக்கியால் கொல்லப்பட்டார். இது சம்பந்தமாகலுவிலஹாமி என்ற கிராம வாசி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜாஎலைக் கொலையில் டப்ளியூ. மார்த்தெலிஸ தனது புதுதுரியோடு ஓர் கோர்ட்டு வழக்கு முடிந்து திரும்பிக்கொண்டிருக்கும்போது கத்தியால் குததப்பட்டிறந்ததாகத் தெரிகிறது.

இந்திய விஞ்ஞானியின் இலங்கை விஜயம்

அடுத்த மாதம் டாக்டர் ஸ்ரீதா நேரு இலங்கை வரலாம்

கொழும்பு, அக். 14

பிரபல இந்திய விஞ்ஞானியான டாக்டர் பண்டிட எஸ். ஸ்ரீதா நேரு கலிபோர்னியாவில் இருந்து இந்தியா திரும்பும மார்க்கத்தில் அடுத்த மாத முற்பகுதியில் இலங்கை வருவார் என்று தெரிகிறது.

டாக்டர் நேரு இந்தியா விஞ்ஞான காங்கிரஸின் தலைமைபீடத்தை வகித்த ஒருவர் என்றும் காவன்டிஷ் விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலையிலும ஜெர்மன் ரேடியோ ஆராய்ச்சி ஸ்தாபனத்திலும் பல முக்கிய ஆராய்ச்சிகளைச் செய்திருப்பவர் என்றும் தெரிகிறது.

பல புஸதகங்களின் ஆசிரியரான டாக்டர் நேரு இந்தியாவின் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் ஓர் உறவினர் என்றும் அறியப்படுகிறது

ரூபா 2000 பெறுமதியான பொருட்கள் களவு

மத்துகம, அக். 12

மத்துகமைப் போலிஸ வடாரத்தில் உள்ள டபிள்யூ ஏ. பி. டி அல்விஸ வீடடில இருந்து ரூபா 2000 பெறுமதியான நகைகளும் பொருட்களும் களவுபோய்விட்டன.

ரயிலில் இருந்து தப்பிய கைதிகள்

பிடிக்க தகவல் தந்தால் ரூபா 500 பரிசு

கொழும்பு, அக். 13

ஆகஸ்ட் 29-ம் தேதி பிளகால் காவலில் இருந்து தப்பி ஓடிய கைதிகளான டபிள்யூ. ஏ. டி. சார்ள்ஸ், ஏ. டி. சுகதாச, எம். பியதாச என்பவர்களைப் பிடிப்பதற்கு சரியான தகவல் தருவோருக்கு ரூபா 500 பரிசளிக்கப்படும் என போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஓர் பிரகடனம் செய்துள்ளார்.

பிரஸ்தாப கைதிகள் வெள்ளவத்தைக் கோர்ட்டில் இருந்து வெளிக்கடைச் சிறைச்சாலைக்கு ரயில் மூலம் கொண்டு போகப்படுகையில் ஓடும் ரயிலில் இருந்து குதித்தோடித் தப்பிவிட்டனர் என்று தெரிகிறது.

மோட்டார் காரும் டயரும் களவு

கொழும்பு, அக். 13

கொழும்பு தென்பகுதியில் இரு கார் கரேஜ்கள் உடைக்கப்பட்டு கள்வர்கள் அங்கு புகுந்திருக்கின்றனர். இதன் காரணமாக ஒரு கரேஜில் இருந்து சில டயர்களும், மற்றதில் இருந்த ஒரு முழுக் காருமே காணாது போய்விட்டதாகத் தெரிகிறது.

ஈகிள் ஹவுஸ்

உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்கு இணையற்றது

தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:—

ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டி ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்

தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.

ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை

நவீன முறையில் தயார் செய்யப்பட்ட



சந்திரா பீடியை
வாங்கி உபயோகியுங்கள்.

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்
இம்மூன்றிலும் முதல்தரமானது வேண்டுமென்றால்
குயின் (ராணி) மார்க்கே
பார்த்து வாங்குங்கள்



குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி
297 & 307 சீ ஸ்டிரீட் (செட்டியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடதுசாரி பார்லிமெண்ட் அங்கத்தினருக்கு வரவேற்பு

பௌத்த சமித்தியால் ஆலயத்தில் நடத்தப்பட்டது.

களுத்துறை, அக். 14

மொரகலலையில் உள்ள சுச்சரிதவர்த்தன பௌத்த சமித்தியால் களுத்துறை பார்லிமெண்ட் அங்கத்தினரான போல்ஷிவிக் லெனினிஸ்ட கட்சிப் பிரதிநிதி திரு சமலி குணவர்த்தனவுக்கு ஓர் வரவேற்பளிக்கப்பட்டது.

லங்கா சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த ஹென்றி பீரிஸ் தலைமை வகித்தார்.

திரு. குணவர்த்தன தமது கட்சியின் கொள்கைகளை விளக்கியதோடு பார்லிமெண்டினால் மட்டும் தமது போராட்டம் முடிந்துவிடாதென்றும், பொதுஜனப் போராட்டமே பலன் தரும் என்றும் அதற்குத் தயாராகும்படியாகவும் பொது மக்களை வேண்டிக்கொண்டார்.

பிரஸ்தாப கூட்டம் மொரகல்லை பௌத்த ஆலயக் கட்டிடத்திலே நடைபெற்றது.

ஆஸ்திரேலியாவில் இந்திய கிரிகெட் கோஷ்டி

தடபுடலான வரவேற்பு

பேர்த், அக். 13

ஆஸ்திரேலியா வந்து சேர்ந்துள்ள இந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கு இங்கு ஒரு பலத்த வரவேற்பளிக்கப்பட்டது. மேற்கு ஆஸ்திரேலிய அரசாங்கம், பேர்த் நகர் மேயர், மேற்கு ஆஸ்திரேலிய கிரிகெட் சங்கம் ஆகியவை இதில் பங்குபற்றின. வரவேற்பின்போது பேசிய இந்தியக் கோஷ்டியின் கேப்டனான எல் அமர்நாத் செய்த சொற்பொழிவு இங்குள்ள கிரிகெட் அபிமானிகளைப் பெரிதும் கவர்ந்துவிட்டது.

(ராய்ட்டர்)

எஜமானரைத் தாக்கியதாக டிரைவர் மீது வழக்கு

காலி, அக் 14

குருணாக்கல் கிராம வேலைக்காரியாலய சூப்ரண்டண்ட வில்காசிம், டபிள்யூ. கே. டேவிட் என்னும் தனது கார் டிரைவரினால கத்தியால் குத்தப்பட்டு ஆஸ்பத்திரிக்கு அனுமதிக்கப்படடுள்ளார்.

டேவிட் தனது எஜமானரின் குழந்தையை அடித்து விட்டதாகவும், அதனால் கோபமடைந்த அவர் டேவிட்டை அடித்ததாகவும் தெரிகிறது. இதன்பேரில் டேவிட் தனது கத்தியை உருவி அவரைத் தாக்கியதாகச் சொல்லப்படுகிறது.

சம்பவத்தின் பின்னர் ஒரு கூட்டம் முஸ்லிம்கள் டேவிட்டைத் தாக்கியதாகச் சொல்லப்படுகிறது. எதிரி டேவிட் அக்டோபர் 17-ம் தேதிவரை ரிமாண்டில் வைக்கப்பட்டான்

அமெரிக்க ஸ்தானிகத்தில் வெடிகுண்டு வீச்சு

பாலஸ்தீனத்திற்கு வர கிரான்ட் முப்தி ஆவல்

அமெரிக்க தூதுக் கோஷ்டியை ஈராக் பகிஷ்கரித்தது

பாக்தாத், அக். 13

அமெரிக்க காங்கிரஸ் அங்கத்தினர்களின் தூதுக் கோஷ்டியொன்று இங்கு வருவதாக ஏற்பாடு செய்திருந்தது. ஐக்கிய தேசஸ்தாபனத்தில் அமெரிக்கா பாலஸ்தீன பிரிவினையை ஆதரித்ததைக் கண்டிக்கும் பொருட்டு ஈராக் சர்க்கார் அமெரிக்க தூதுக் கோஷ்டியை வர வேண்டாமென்று தடுத்து விட்டதால் அமெரிக்க கோஷ்டியார் தங்கள் பாக்தாத் விஜயத்தை ரத்து செய்துவிட்டார்கள். இங்குள்ள பத்திரிகைகள் அமெரிக்க சாமான்களைப் பகிஷ்கரிக்கும்படி பிரசாரம் செய்து வருகின்றன.

அமெரிக்க ஸ்தானிகத்தின் மீது வெடிகுண்டு வீச்சு

ஜெரூசலேம், அக். 13

இங்குள்ள அமெரிக்க ஸ்தானிகர் காரியாலயத்தில் வெடிகுண்டு வீசப்பட்டது; வெடிகுண்டு வெடித்து புகை கிளம்பியது. நகரில் அபாயச் சங்கு ஊதப்பட்டது. ஸ்தானிகமோட்டார்கள் சேதமடைந்தன. கட்டிடக்கதவுகள் நொறுங்கின. இரு சிப்பந்திகள் காயமடைந்தனர்.

நேற்று போலந்து ஸ்தானிக காரியாலயத்தில் வெடிகுண்டு எறியப்பட்டதால் இன்று அங்கு பலமான போலீஸ் பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கிறது. மற்ற ஸ்தானிகர்களும் போலீஸ் பந்தோபஸ்து கோரியிருக்கின்றனர்.

யூதருக்குப் பாதுகாப்பு

யூத தேசிய கவுன்ஸில் தலைவர் பின் வருமாறு தெரிவித்தார்:- வடக்கிலுள்ள யூதர் குடியேற்றப் பிரதேசங்களைப் பாதுகாக்க அதிக துருப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மீட்சி நிதி மீண்டும் திரட்டப்படும். உலக யூதர்கள் இதற்கு ஏராளமாகப் பண உதவி செய்வார்கள்

பத்திரிகா நிருபரிடம் இப்பொழுது லெபானனில் தங்கியிருக்கும் கிரான்ட் முப்தி, பிரிட்டிஷார் பாலஸ்தீனத்தை விட்டுவெளியேறுவதுதான் உசிதமான செயல் என்று அறிவித்தார். தன் தாய் நாட்டுக்குத் திரும்பி வர ஆவலுடனிருப்பதாக அவர் தெரிவித்ததார்.

பாலஸ்தீனம் சம்பந்தமாக அமெரிக்கா திட்டவட்டமான கோரிக்கைகளை விளக்கமாகத் தெரிவிக்காததுபற்றி பிரிட்டிஷ் பத்திரிகைகள் அமெரிக்காவைக் கண்டிக்கின்றன

சிரியா துருப்புகள்

டமஸ்கஸ், அக். 13

சிரியா துருப்புகளின் நடமாட்டச் செய்திகள் வெளியேறாதபடி தடை செய்யப்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் ஸ்தானிகர் சிரியா பிரதமமந்திரியைச் சந்தித்து பிரிடடிஷ் துருப்புகள் பாலஸ்தீனத்திலிருக்கும்வரை அமைதிக்குப் பங்கம் விளைவிக்கலாகாதென்று தெரிவித்தார்.

(ராய்ட்டர்)

வயோதிபரைக் கொலை செய்த இளைஞன்

சுப்ரீம் கோர்ட்டில் விசாரணை நடக்கும்

மட்டக்களப்பு, அக். 14

மட்டக்களப்பு-கல்முனை ரஸ்தா நகரில் இருந்து சுமார் 7 மைல் தூரத்தில் உள்ள புதுக்குடியிருப்பு என்னுமிடத்தில் 4-ம் தேதி டி. கணபதிப்பிள்ளை என்பவர் (60 வயது) கொலை செய்யப்பட்டார். இவரைக் கொலைசெய்தவரென்று கூறப்படும் எஸ். கதிராமபொடி (20 வயது) என்பவர் உடனேயே தலைமறைவாக இருந்ததால் போலீஸார் அவரைத் தேடிவந்தனர். 6-ம் தேதி இவரை அவரது இனத்தவர் ஒருவர் கோர்ட்டில் ஆஜர்செய்தார். மாஜிஸ்டிரேட் விசாரணை செய்து முடிவில் அடுக்க சுப்ரீம்கோர் விசாரணையின் போது சுப்ரீம்கோர்ட்டில் இவ்வழக்கை எடுக்கும்படி நீதிபதி தீர்ப்பளித்தார்.

அட்டிகை திருடியவனுக்கு ரூபாய் 100 அபராதம்

மட்டக்களப்பு, அக். 14

செங்கலட்டியைச் சேர்ந்த ஆர். சின்னப்பிள்ளை என்பவருக்குச் சொந்தமான ரூபாய் 100 மதிப்புள்ள அட்டிகையைத் திருடியதாக கே. ரத்தினசிங்கம் (22 வயது) என்பவன் மீது எருவூர் போலிஸாரால் குற்றச்சாட்டித்தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றவாளியெனக் கண்டு மட்டக்களப்பு மாஜிஸ்டிரேட் ரூ. 100 அபராதமும் கோர்ட்டு கலையும் வரை சிறைத் தண்டனையும் விதித்தார்.

ரூபா 608 செக் மோசடி

தெமட்டகொடை வாசி மீது வாரண்டு

கொழும்பு, அக். 13

தெமட்டகொடையைச் சேர்ந்த டொன் கில்பர்ட் ஹெட்டியாராச்சி என்பவர் வாக்கர் அன்ட் கோ கம்பெனியில் வேலை செய்யும் ஒருவரிடம் ரூபாய் 608 க்கு ஒரு செக் கொடுத்து 8 பெட்டிகள் நிறைந்த வயர் ஆணிகளைப் பெற்றுக்கொண்டதாகத் தெரிகிறது. மேற்படி செக் ஒரு போலி செக்கென்றும் பிரஸ்தாப நபருக்கு வங்கிக் கணக்கிலலை என்றும் பின்னால் தெரியவந்தது.

குறித்த நபர் மீது வாரண்டு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நிலைமை

அமெரிக்க ஜனாதிபதி மந்திராலோசனை

ஆர்ஜன்டைனாவுக்கு யூகோ கண்டனம்

வாஷிங்டன், அக். 13

ஐரோப்பாவின் நிலைமையை துருவி ஆராய்ந்து ஆலோசித்து முடிவு செய்யும் பொருட்டு இன்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் அமெரிக்க ராஜதந்திரிகளையும் ஸ்தானாதிபதிகளையும் வெள்ளை மாளிகைக்கு வரவழைத்து அவர்களது ஆலோசனைகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தார். ஒரு மணி நேரம் வெள்ளை மாளிகையில் இம் மந்திராலோசனை நடைபெற்றது. மாஸகோவிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் ஸமித பிரிட்டனிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் டக்ளஸ், ஜெர்மனியிலுள்ள அமெரிக்க ராணுவ கவர்னர் கிளே, இவரது அரசியல் ஆலோசகர் மூர்வி இவர்கள் தங்கள் கருத்துக்களை ஜனாதிபதிக்குத் தெரிவித்தார்கள்.

பாலஸ்தீனம்பற்றி ரஷியா

நியூயார்க், அக். 13

கொள்கை சம்பந்தப்பட்ட மட்டில் பாலஸ்தீனப் பிரிவினையை ஆதரிப்பதாக ஐக்கிய தேச பாலஸ்தீன கமிட்டியில் ரஷியப் பிரதிநிதி தெரிவித்தார். அராபியர்களும் யூதர்களும் பாலஸ்தீனத்தில் சுதந்திரமாகவும் அமைதியாகவும் வாழ இருவருக்கும் உரிமையுண்டு என்று தெரிவித்தார்.

பாரசீகமும் ரஷியாவும்

டெஹ்ரான், அக் 13

ரஷிய-பாரசீக ஆயில் ஒப்பந்தத்தை துரிதமாக பாரசீக பார்லிமெண்டில் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென வற்புறுத்தி பாரசீக பிரதம மந்திரியுடன் இங்குள்ள ரஷிய ஸ்தானிகர் பேசிக்கொண்டிருக்கும் போது மனக் கசப்புடன் வெளியேறியதாகச் சொல்லப்படுகிறது.

ஜெர்மன் ஒற்றர் கைது

ஹாம்பர்க், அக். 13

ஹாம்பர்க் மேயரின் மருமகன் வில்சன் லீப்சிக் சந்தைக்குச் சென்றவர் மாயமாய் மறைந்தார். அவர் பிரிட்டிஷ் பிரதேசத்திலிருந்து ரஷியப் பிரதேசத்திற்குள் சென்றதாகச் சொல்லப்பட்டது. இவர் கீல் நகரில் ஒரு வியாபாரி; 41 வயது. இவர் உளவாளியாக இருந்ததாய் ரஷியர் கைதுசெய்து பின்னர் விடுவித்துவிட்டார்களாம்.

ரோம் தேர்தலில் கம்யூனிஸ்ட் வெற்றி

ரோம நகரசபைத் தேர்தலில் இத்தாலி பிரதம மந்திரியின் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் பலத்த போட்டியிருந்தது. கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றனர்.

மஞ்சூரியா

ஷாங்கை, அக். 14

மஞ்சூரியாவில் 90 சத விகிதமுள்ள பகுதி இப்பொழுது இருந்து வருவதாகவும் மஞ்சூரிய ஜனத்தொகையில் 39 சத விகிதமே சீன சர்க்கார் நிர்வாகத்திலிருப்பதாகவும் சீன ப்பிரதம மந்திரி தெரிவித்தார்.

சில்லியில் வேலைநிறுத்தம்

சான்டியாகோ, அக். 13

சில்லி தேசத்தில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தம் 10 தினங்களாக நடைபெற்றவருகின்றன. ராணுவ கடற்படை உணவுகள் காலியாகி வருகின்றன. ரயில் போக்குவரத்து குறைக்கப்பட்டுள்ளது. கம்யூனிஸ்டுகள்தான் வேலை நிறுத்தத்திற்குக் காரணமென்று சிலர் கூறுகின்றனர்.

ஆர்ஜன்டைனுக்கு யூகோ கண்டனம்

லண்டன், அக். 13

புனோஸ் ஏர்ஸ் நகரிலுள்ள யூகோஸ்லவகியா சர்க்கார் ஸ்தானிகர் இரு ஸ்தானிக அதிகாரிகளை ஆர்ஜன்டைனா கைது செய்து வைத்திருப்பது சம்பந்தமாக ஆர்ஜன்டைன் சர்க்காரிடம் கண்டனத்தைத் தெரிவித்தார். தென் அமெரிக்காவில் புரட்சி நடத்த சதி செய்ததாக சில்லி சர்க்கார் கூறிய புகாரை முன்னிட்டு அந்த இரு யூகோ ஸ்தானிக அதிகாரிகளும் ஆர்ஜன்டைனாவில் சிறை வைக்கப்பட்டிருக்கின்றனர்.

(ராய்ட்டர்)

ஆசிய நாடுகளின் உறவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு அநுகூலமாக மூவர் கமிஷன் முடிவு செய்வதே உசிதமானதென்றும் தெரிவித்தார்.

வியட்நாம்மீது பிரெஞ்சு யுத்தம்

பாரிஸ், அக். 13

வியட்நாம் மீது பிரான்ஸ் தொடுத்துள்ள யுத்தத்தில் பிரெஞ்சுத் துருப்புகள் டொங்கின் மாகாணத்தில் மற்றுமிரு நகரங்களைக் கைப்பற்றினர். ஒன்று மாகாணத் தலைநகரான ஹானோயிலிருந்து 128 மைல் தூரத்தில் சீன எல்லையிலுள்ள காவோபாங; மற்றொன்று ஹானோயிக்கு வட கிழக்கே 80 மைல் தூரத்திலுள்ள பேக்கான். ஹானோயிலிருந்து சீன எல்லையிலுள்ள லாங்சீன் வரையுள்ள ரஸ்தா முழுவதும் பிரெஞ்சுத் துருப்புகள் வசமாயிற்று. யுத்தம் வெற்றிகரமாக நடைபெறுகிறது. வியட்நாம் குடியரசுத் துருப்புகள் சேதமடைந்து வருகின்றன. வியட்நாமியர்கள் 200 பிரெஞ்சுக் துருப்புகளையும் 460 பிரெஞ்சுக்காரர்களையும் பிணையாக பிடித்து வைத்திருக்கின்றனர்.

இந்தியாவின் பிரமாண்டமான வர்த்தகக் கப்பல் படை

புதுடில்லி, அக். 13

இந்தியா பிரமாண்டமான தோர் வர்த்தகக் கப்பல் படையை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

ஏராளமான கப்பல்களை வாங்கும்படியும் புதிய கப்பல்கள் கட்டும்படியும் இந்திய சர்க்கார் இந்தியக் கப்பல் கம்பனிகளுக்கு அறிவித்திருக்கிறார்கள். அதற்கான உதவி செய்வதாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

அடுத்த 5 வருஷ காலத்திற்குள் முன்னர் ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகள் கிழக்குலகத்தில் நடத்தி வந்த கப்பல் போக்கு வரத்துகளில் 30 சத விகித போக்குவரத்தை இந்தியா கைப்பற்றிக் கொள்ளும். இந்திய சர்க்கார் கப்பல் கொள்கைக் கமிட்டி அதற்கான தீவிர முயற்சிகளைச் செய்து வருகிறார்கள்.

கத்தியவார் கடற்கரையில் ஒரு முதல்தர துறைமுகம்

பம்பாய், அக் 14

கத்தியவார் கடற்கரையில் எல்லா நவீன சாதனங்களுடன் கூடிய ஒரு துறைமுகத்தை அமைக்க இந்திய சர்க்கார் ஆலோசித்து வருகின்றனர். மேற்கு இந்தியாவின் தேவைகளுக்கு ஏராச்சி எவ்விதம் உபயோகபடடு வந்ததோ, அவ்விதம் உபயோகப்படும் முறையில் இந்தத் துறைமுகம் அமையும்.

கடற்கரையில் உள்ள கண்ட்லா என்ற இடத்தில் இத்தகைய துறைமுகமாகக் கட்டப்படும் என்று தெரிகிறது. இந்த தட்டத்தல 100 மைல் நீளம் புதிய ரயில் போடப்படும்.

எஞ்ஜின் உற்பத்தி 'ஓர்க்ஷாப்'

புதுடில்லி, அக். 14

கஞ்சரபாரா கிழக்குப் பாக்கிஸ்தான் எல்லைக்கு அருகிலிருப்பதால் அங்கே எஞ்ஜின் உற்பத்தி ஓர்க் ஷாப் ஸ்தாபிக்கும் யோசனை கைவிடப்படலாம்

ராணிகஞ்சுக்கும் அஸன்ஸாலுக்கும் மத்தியில் அந்த ஓர்க் ஷாபபுக்கு இடம் நிச்சயிக்கப்படலாமென்று ஊகிக்கப்படுகிறது.

விமானக் கிளப்

1939ல் யுத்தக் காரணமாக மூடபபட்டிருந்த இந்தியா விமானக்கிளப் மீண்டும் புதுபபிக்கபபட்டிருக்கிறது. இந்தியாவிலுள்ள மற்ற எல்லா விமானக் கிளப்புகளும் இதில் சேர்ந்து விமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளும்.

39 கிழக்கத்திய சமஸ்தானங்கள்

கட்டாக், அக். 14

இதுவரை கிழக்கத்திய சமஸ்தானங்களைச் சேர்ந்த 39 சமஸ்தானங்கள் இந்திய யூனியனில் சேர்ந்து இடைக்கால ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டன.

இந்திய ரப்பர் விலை

புதுடில்லி, அக். 14

இந்திய ரபபர் போர்டின் ஆலோசனைக் கமிட்டி கொச்சித் துறைமுகத்தில் ஏற்றப்படும் முதல் நம்பர் ரப்பர் விலையை 100 ராத்தலுக்கு 72 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

சுத்தானந்த பாரதியாருக்கு 25 000 ரூபாய்

அன்பு நிலையத்தார் செலுத்தியிருக்கின்றனர்

சென்னை, அக். 14

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் கடியாபட்டி என்னும் ராமச்சந்திரபுரத்திலுள்ள அன்பு நிலையத்தார் புதுச்சேரி அரவிந்த ஆசிரமத்திலுள்ள சுவாமி சுத்தானந்த பாரதியார் எழுதும் நூல்களைப்பிரசுரித்து வருபவர்கள். அந்த அன்பு நிலையத் தலைவர் திரு வீர. சுவாமிநாதன் செட்டியார் கீழ்க்கண்ட அறிக்கை வெளியிட்டிருக்கிறார்:-

சுவாமி சுத்தானந்த பாரதியார் நூல்கள் அனைத்தையும் இதுவரை வெளியிட்டதற்காக அவருக்கு நன்கொடையாகவும் ஹானரேரியமாகவும், ராயல்டியாகவும் 1947செப்டம்பர் 12-ம் தேதியன்று ரொக்கமாக 12,000 ரூபாயும், பாங்க் டிப்பாஸிடுகள்மூலம் 9250 ரூபாயும் அச்சுக் கூலிக்காக 900 ரூபாயும், அதற்கு முன் பல தடவைகளில் 2850 ரூபாயும் ஆக மொத்தம் 25,000 ரூபாய் கொடுத்திருக்கிறோம்.

முனிஸிப்பல் கவுன்ஸில் கூட்டம்

கோரம் இல்லாததால் ஒத்திவைப்பு

கொழும்பு, அக். 14

கொழும்பு முனிஸிப்பல் கவுன்ஸிலின்நேற்றையகூட்டம் தகுந்த கோரமில்லாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டது. அடுத்த கவுன்ஸிலின் கூட்டம் அக்டோபர் 20-ல் நடைபெறும்.

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோட் மருதானை

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்
சனியும் ஞாயிறும் மெட்னி 3 மணிக்கும்.

சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!

"தாய் நாடு" தமிழ்ப் படம்

வெற்றிகரமான 4-வது வாரம்!

அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது.

மெட்ரால் மெயில் புகழ் பாடலிங்மணி — புதிய நடிகை சுந்தரி

மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் பால்கனிக்கு அரைச் சார்ஜ் எடுக்கப்படும்.

உங்கள் டெங்கனில் — மங்கள சூரியன்

மெய்கண்டான் REGD. 77179

திருக்குறட் கலண்டர்

புதிய கிளேஸ் கடுதாசியில் அச்சிடப்பெற்றது.

1948-ம் வருட மெய்கண்டான் திருக்குறட் கலண்டர்	5-10-47 க்கு முன் ½ பங்கு முற்பணத்துடன் கூடிய ஆடருக்கு 12 க்கு	100 க்கு	5-10-47 க்குப்பின் 1-11-47 க்கு முன் ½ பங்கு முற்பண ஆடருக்கு 12 க்கு	100 க்கு
No. 1. சிவப்பு	18-00	145-00	19-00	150-00
No. 1. கறுப்பு	16-50	130-00	17-60	135-00
முதுமொழிக் கலண்டர் No. 2.	8-50	65-00	9-00	70-00
No. 1. டயறி (1 பக்கம் 1 நாள்)	16-00	—	16-50	—
No. 2. டயறி (திருக்குறள் டயறி)	8-50	—	9-00	—

சில்லறை விலை: No 1. சிவப்பு 1 க்கு 1-75
No 1. கறுப்பு ,, 1-55

இன்றே ஆர்டர் செய்யுங்கள் பிந்தினால் கிடைப்பதரிது.

மெய்கண்டான் அச்சியந்திரசாலை, மட்டுவில், சாவகச்சேரி.

கதம்பைக் கயிறு

கிந்தொட்டை கதம்பைக் கயிறுகளும் தும்பால் செய்யப்பட்ட சாமான்களும் நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம்

ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

தேடா கயிறு. கம்பை, வடம், ஈக்கில்தடி, தும்புத்தடி, கயிற்றுப்பாய், காப்பற், கால்மிதி இவ்விடம் குறைந்த விலையில் வேண்டிய தினுசுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தோடு திறம் லங்கா பிராண்ட் வினாகிரியும், கை பேக்ஸ்களும் கிடைக்கும்

மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு

விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kalyoom,
Coir Ropes
Manufacturer at Gintota,
No 44, Wolfendahl Street,
Colombo.

ஏ. அப்துல் கையூம்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தொட்டை.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் அக்டோபர் மாதம் 15-ம் தேதி இந்தப் பத்திரிகை 194ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தாரில் அச்சிட்டு, கொழும்பு-மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

பிடிச் சக்காவர்த்தி.

த.பி. சொக்கலால் ராம்சேட் பீடி

2 பீடி ரிங்லேபில்

சொக்கலால் ராம்சேட்

த.பி. சொக்கலால் & கம்பெனி லிமிடெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org